உலகம் எங்கள் குடும்பம்

ரஜினி பெத்துராஜா

உலகம் எங்கள் குடும்பம்

(சிறுவர்களுக்கான பயண நாவல்)

ரஜினி பெத்து ராஜா

நிலா புக்ஸ்

முகவரி

Nilacharal Ltd
18 Collingwood Road
Crawley
RH10 7WG
UK
E-mail: team@nilacharal.com

நூல் தலைப்பு	:	உலகம் எங்கள் குடும்பம்
ஆசிரியர்	:	ரஜினி பெத்து ராஜா
மொழி	:	தமிழ்
பதிப்பகம்	:	நிலாச்சாரல் லிமிடட்
காப்புரிமை	:	ஆசிரியருக்கு
பதிப்பாசிரியர்	:	நிலா

"உலகம் முழுவதும் பரவியுள்ள தமிழ் சமுதாயத்திற்கு தமிழ் இலக்கியங்களை படிக்க வாய்ப்பளிப்பதும், வளரும் எழுத்தாளர்களை ஊக்கப்படுத்துவதும், வருங்கால சந்ததிகளுக்கு தமிழ் இலக்கிய பொக்கிஷங்களை பாதுகாத்துத் தருவதுமே 'நிலா புக்ஸ்' -ன் இலட்சியம்"

TERMS OF USE:

- You may not sell, exchange, distribute or otherwise transfer this book in any form what so ever.
- You may make one (1) printed copy of this book for your personal use. You may not sell, exchange, distribute or otherwise transfer this copy to any other person for any reason.
- You may make one (1) electronic copy each of this book for archival purposes. Except for the single (1) permitted print copy and the single (1) archival copy, you may not make any other copies of this book in whole or in part in any form.

****

உபயோக நிபந்தனைகள்

- நீங்கள் இந்த நூலை எந்த வடிவத்திலும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு எந்த விதத்தில் கைம்மாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்த நூலின் ஒரு (1) பிரதியை உங்கள் சொந்த உபயோகத்துக்கு அச்சிட்டுக் கொள்ளலாம். அந்த அச்சுப்பிரதியை எந்த ஒரு நபருக்கும் எக்காரணம் கொண்டும் விற்கவோ, பண்ட மாற்றம் அல்லது விநியோகம் செய்யவோ அல்லது வேறு விதத்தில் கைமாற்றுவதோ கூடாது.
- நீங்கள் இந்நூலின் ஒரு (1) மின் பிரதியை ஆவணத்திற்காக உருவாக்கிக் கொள்ளலாம். ஒரே ஒரு (1) அனுமதிக்கப்பட்ட அச்சுப் பிரதியையும் ஒரே ஒரு (1) ஆவணப் பிரதியையும் தவிர இந்நூலின் முழுதையுமோ அல்லது பாகத்தையோ எவ்விதத்திலும் வேறு பிரதிகள் எதுவும் எடுக்கக்கூடாது.

****

அணிந்துரை

சிறுவர் இலக்கியம் இன்று நல்ல சூழ்நிலையில் வளர்ந்து கொண்டு வருகிறது. குழந்தைக்கவிஞர் அமரர் அழ.வள்ளியப்பா அவர்களின் முயற்சியாலும் குழந்தை எழுத்தாளர் சங்கத்தின் பணிகளாலும் சிறப்பான இடத்தை அடைந்து வருகிறது.

மத்திய, மாநில அரசுகளும் இதன் வளர்ச்சிக்கு ஆதரவளித்து வருகின்றன. நூலகங்களும் சிறுவர் இலக்கிய நூல்களை வாங்கி உதவி வருகின்றன.

எனினும், குழந்தைகளுக்கான பயணக்கட்டுரை நூல்களும், பயணக்கதை நூல்களும் அதிக அளவில் தமிழில் வெளிவரவில்லைதான்.

அந்தக்குறையைப் போக்கும் விதத்தில் வெளிவருவது தான் இந்த 'உலகம் எங்கள் குடும்பம்' என்ற சிறுவர் நாவல்.

ராஜபாளையத்தைச் சேர்ந்த சகோதரி ரஜினி பெத்து ராஜா அவர்கள் கதை, கவிதைகள் பல எழுதி இதழ்களில் வெளிவந்துள்ளன.

அவர்கள் செர்வாஸ் அமைப்பின் மூலம் குடும்பத்துடன் ஆஸ்திரேலியா நாட்டுக்குச் சென்று அங்குள்ள குடும்பங்களில் தங்கிப் பழகி நல்ல அனுபவம் பெற்றவர்கள். அந்த அனுபவத்தை குழந்தைகளுக்குப் பயன்படும் விதத்தில் நாவலாக எழுதி, மனிதநேயம், தேசிய ஒருமைப்பாடு, உலகநாடுகள் ஒற்றுமை, சகோதர பாசம், அன்பு ஆகிவற்றைக் கதையோடு பின்னி சுவைபட ஆக்கியிருக்கிறார்கள்.

சிறுவர்களுக்கு விளங்கும் இனிய நடை, அருமையுடன் கதை சொல்லும் பாங்கு ஆகிய முறைகளில் இந்த நாவல் சிறந்து விளங்குகிறது.

'உலகம் எங்கள் குடும்பம்' என்ற இந்த நாவல் சகோதரி ரஜினி பெத்து ராஜாவின் முதல் நூல். இந்தச் சிறுவர் இலக்கிய நூல் குழந்தை இலக்கிய உலகில் பெரிதும் வரவேற்கப்படும் என நம்புகிறேன். பெரியவர்கள் படிக்கவும் இதிலே செய்திகள் சுவையாகச் சொல்லப்பட்டுள்ளன.

இலக்கிய உலகில் சகோதரியவர்கள் மேலும் புகழ் பெற வாழ்த்துகிறேன். வாசகர்கள் இந்த நூலை வாங்கி ஆதரவளிக்க வேண்டுகிறேன்.

பொதுச்செயலர்	அன்புடன்
மணிமேகலைமன்றம்	குறிஞ்சிச் செல்வர்
இராஜபாளையம்	**கொ.மா.கோதண்டம்**

பொருளடக்கம்

		பக்க எண்
1.	சமாதானத்தின் சங்கமம்	3
2.	பம்பாயில்	7
3.	இந்திய மண்ணை விட்டு	11
4.	பெர்த்தில் பிள்ளைகள்	16
5.	அடிலெய்டும் அபர் ஜனியர்களும்	21
6.	ஆஸ்திரேலியக் காந்தி	27
7.	பொன் விளையும் பூமி	33
8.	டாஸ்மேனியத் தீவில்	37
9.	சிட்னியின் சிறப்புகள்	42
10.	கண்கவர் கேன்பரா	47
11.	பிரிஸ்பனில் பிரியா விடை	50
12.	விமான நிலையத்தில் வினோதம்	59

உலகம் எங்கள் குடும்பம்

(சிறுவர்களுக்கான பயண நாவல்)

உலகம் எங்கள் குடும்பம்

1. சமாதானத்தின் சங்கமம்

அந்த இனிய காலை நேரத்தில் மீனம்பாக்கம் காமராஜ் விமான நிலையம் களை கட்டி இருந்தது. பயணிகளும், அவர்களை வழியனுப்புபவர்களும், வரவேற்பவர்களுமாய் அந்த இடத்தை கலகலப்பாக்கிக் கொண்டிருந்தனர்.

ரம்யமான இசையை ஒலிபரப்பிக் கொண்டிருந்த வரவேற்புக் கூடத்தில் கள்ளமற்ற இளமைத் துடிப்புடன் கூடிய சிறுவர்களின் கூட்டம் ஒன்று கண்ணைக் கவர்வதாக இருந்தது. பதினான்கு, பதினைந்து வயது நிரம்பிய பத்துச் சிறுவர்கள் ஒன்று கூடித் தங்கள் இனிய நண்பனுக்கு மலர்க்கொத்துகள் தந்தும், வாழ்த்துக்கள் கூறியும் வழியனுப்பிக் கொண்டிருந்தனர். அவர்களின் வாழ்த்துக்களை நன்றி கலந்த புன்னகையுடன் ஏற்றுக் கொண்டு உரையாடிக் கொண்டிருந்தான் விவேக்.

வயதுக்கேற்ற உயரம், சிவந்த நிறம், விசாலமான நெற்றி, பெயருக்கேற்றபடி விவேகத்தை வெளிப்படுத்தும் கூர்மையான கண்கள், மொத்தத்தில் பார்த்தவுடன் புத்திசாலி என நினைக்க வைக்கும் தோற்றம். அந்த இளம் நிற ஜீன்ஸும், மெரூன் கலர் ‘T’ ஷர்ட்டும் மிக நன்றாகப் பொருந்தி இருந்தது அவனுக்கு.

அவனுக்குச் சற்று அருகில் “ஈன்ற பொழுதின் பெரிதுவக்கும்......” என்பதற்கு ஏற்ப, அவனைப் பெருமிதத்துடன் பார்த்தபடி அமர்ந்திருந்தனர், அவன் பெற்றோர் திரு.ராமச்சந்திரனும், திருமதி ரம்யாவும். தம் மகன் வெளிநாடு போகிறான், அதுவும் ஒரு போட்டியின் வெற்றியில் அனுப்பப்படுகிறான் என்றால் எந்த தாய் தந்தையர்க்குத்தான் மகிழ்ச்சியாய் இருக்காது?

விவேக்கின் தந்தை திரு. ராமச்சந்திரன் ‘SERVAS’ எனப்படும் உலக சமாதானக் குழுவின் உறுப்பினர். பிரபல வழக்கறிஞரான அவருக்குச் சமாதானத்திலும் நாட்டுப் பற்றிலும் ஈடுபாடு இருந்ததில் வியப்பு இல்லை. ‘SERVAS’ எனும் உலக சமாதானக் குழு மனித நேயத்தை மனதிற் கொண்டு மகாத்மாவால் உருவாக்கப்பட்டது.

“ஒவ்வொரு உண்மையான நட்பும் உலக சமாதானத்தின் உறுதியான அஸ்திவாரமாக அமைகிறது........” அண்ணல் காந்தியடிகளின் இவ்வாசகத்தினைக் குறிக்கோளாய்க் கொண்டு இக்குழு இயங்கி வருகிறது.

இதன் உறுப்பினர்களான பலப்பல நாடுகளைச் சேர்ந்த மக்கள் அந்நிய நாட்டு உறுப்பினர் ஒருவரைத் தங்கள் விருந்தினராக ஏற்றுக் கொண்டும், இவர்கள் அவர்கள் நாட்டில் விருந்தாளியாக ஆகியும், தங்கள் உறவினைப் பலப்படுத்திக் கொள்கிறார்கள்.

உலகிலுள்ள மனித மனங்கள் அனைத்தும் ஒன்று சேர்ந்து விட்டால்...... பின் போட்டிகள் இல்லை. பேதங்கள் இல்லை. வன்முறைகள் இல்லை.

“யாதும் ஊர்தான்; யாவரும் கேளிர்தான்.” நம் நாட்டுச் சமாதானக்குழுத் தலைவர் திரு.பரேக்ஜி உண்மையான காந்தியவாதி. சிறு வயதிலேயே காந்தியடிகளுடன் தொடர்பு கொண்டிருந்தவர். குஜராத்தில் ஆதிவாசிகளுக்கென ஆஸ்ரமம் ஒன்றை அமைத்துச் சமூக சேவை செய்து வருகிறார். பல நாடுகளைச் சேர்ந்த மக்கள் இவருடன் தங்கிச் சிறிது காலம் சமூக சேவை செய்துவிட்டுப் போகிறார்கள். அநேக முறை வெளிநாடுகளுக்கு விஜயம் செய்துள்ள இவர், இம்முறை “செர்வாஸ்” உறுப்பினர்களின் குழந்தைகளைத் தம்முடன் அழைத்துச் செல்வதில் ஆர்வம் கொண்டிருந்தார். அவர்களுக்கெனச் சிறிய போட்டி ஒன்றினை ஏற்பாடு செய்து அதில் வெற்றி பெற்றவர்களை ஊக்குவிப்பதெனத் தீர்மானித்தார்.

தமிழகத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே மாணவன் விவேக். உலக சமாதானத்தை வெளிப்படுத்தும் வகையில் ஓவியம் தீட்டி அனுப்பும்படி கேட்டிருந்தார், திரு. பரேக்ஜி. படிப்பைப் போலவே ஓவியம், கர்நாடக சங்கீதம் போன்றவற்றிலும் அதிக

ஈடுபாடு கொண்டிருந்த விவேக், தன் முழுத் திறமையையும் வெளிப்படுத்தி அழகான ஓவியம் ஒன்றைத் தீட்டி அனுப்பினான்.

அவனின் கோடை விடுமுறை நேரத்தில் முடிவுகள் அறிவிக்கப் பட்டன. திரு. பரேக்ஜியே விவேக்கை போனில் பாராட்டி, அவன் தந்தைக்கும் மகிழ்ச்சியைத் தெரிவித்தார். இன்னும் பத்தே நாட்களில் அவனை ஆஸ்திரேலியா பயணத்திற்குத் தயாராக இருக்கும்படியும், மற்ற ஏற்பாடுகளைத் தான் கவனித்துக் கொள்வதாகவும், பம்பாயிலிருந்து போட்டியில் தேர்ந்தெடுக்கப்பட்ட அனைவரும் புறப்பட வேண்டும் என்றும் கூறினார்.

தான் வெளிநாடு செல்லப் போகும் நினைப்பே விவேக்கிற்கு உற்சாகம் அளிப்பதாக இருந்தது. நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் தன் பயணம் பற்றித் தெரிவித்தான். வகுப்பு ஆசிரியரிடமும், தலைமை ஆசிரியரிடமும் போய்க் கூறி ஆசி பெற்று வந்தான். அவர்களுக்குத் தங்கள் பள்ளி மாணவன் வெற்றி பெற்றுப் பயணம் மேற்கொள்வதில் மிகவும் பெருமையாக இருந்தது.

ஆஸ்திரேலியா என்ற தீவுக் கண்டம் அவன் கண் முன் வந்து போனது அட்லஸை எடுத்து, தான் ஆஸ்திரேலியாவைப் பற்றிப் படித்ததை நினைவு படுத்திக் கொண்டான். துள்ளிக் குதித்து ஓடும் கங்காருவும், பஞ்சுப் பொம்மை மாதிரியான “கோலா” கரடிகளும் அவனை வரவேற்பதைப்போல இருந்தது.

பயணத்திற்கு வேண்டியவற்றைக் கவனத்துடன் எடுத்து வைத்துக் கொண்டான் விவேக். அம்மா ரம்யா மிகுந்த அக்கறையுடன் தினப்படி உடைகள், குளிர் கால உடைகள் அவசரத்திற்குத் தேவையான மருந்துகள், ஊறுகாய்ப் பாட்டில்கள் எல்லாம் பேக் பண்ணி வைத்தாள். அப்பாவும் விவேக்கும் அங்குள்ளவர்களுக்கு அன்பளிப்புகள் தர, சின்னச் சின்னப் பரிசு பொருட்களை வாங்கி வந்தனர். அம்மாவும் அப்பாவும் பம்பாய் வரை அவனுடன் வருவது மகிழ்ச்சியாக இருந்தது. முதல் நாள் கோயிலுக்குச் சென்று பயணம் நன்கு அமைய ஆண்டவனின் அருள் பெற்று வந்தனர். போகும் இடத்தில் நடந்து கொள்ளும் விதம் பற்றி அம்மாவும் அப்பாவும் பல அறிவுரைகள் கூறினர்.

பயணிகளை ஆயத்தமாகும்படி ஒலிபெருக்கியில் குரல் கேட்க, நண்பர்களிடம் அன்புடன் விடை பெற்றுக்கொண்டு, பெற்றோருடன் கிளம்பினான் விவேக்.

பம்பாயில் சாம்ராட் ஹோட்டலில் அறிமுக விருந்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. டாக்ஸியில் போய் இறங்கியதும் திரு. பரேக்ஜியைக் கண்கள் துழாவின. இதுவரை அவரைப் பற்றிக் கேள்விப் பட்டுள்ளானே தவிர, பார்த்ததில்லை.

"ஆவோ விவேக் பேட்டா..." அன்பொழுகும் குரல் கேட்டுத் திரும்புவதற்குள் ஆரத் தழுவிக் கொண்டார் அந்தப் பெரியவர்.

ஓ ! இவர்தான் பரேக்ஜியா ?

காவி நிறக் கதரில் வேஷ்டியும் ஷர்ட்டும் அணிந்திருந்தார். தலையில் வெண்ணிறக் காந்திக் குல்லாய்... கையில் பிரம்புக் கைத்தடி; நெடிய ஆஜானுபாகுவான தோற்றமும், எளிமையும், 60 வயதிலும் விடாத திடகாத்திரமும், கனிவான பேச்சும், கண்ணியமான காந்தியவாதி என்பதைப் பறைசாற்றின.

தந்தை ராமச்சந்திரனுடன் பேசிக் கொண்டிருந்த பரேக்ஜி விவேக்கிடம் பாஸ்போர்ட், விசா அனைத்தையும் ஒப்படைத்தார். பரேக்ஜியின் மனைவி பிரபாவதியுடன் அம்மா கொஞ்சம் சிரமப்பட்டு ஹிந்தியில் உரையாடிக் கொண்டிருந்தார். விருந்துக் கூடத்திற்கு அழைத்துச் சென்றார் பரேக்ஜி. அங்கே அவனை ஒத்த வயதுடைய பதினோரு சிறுவர்கள் தங்கள் பெற்றோருடன் அமர்ந்திருந்தனர்.

முற்றிலும் புதிய முகங்கள். சிறுவர்கள் ஒருவரை ஒருவர் ஆர்வத்துடன் பார்த்துக் கொண்டனர். பின் மெள்ளப் புன்சிரிப்பால் நட்பை வெளிப்படுத்திக் கொண்டனர்.

பரேக்ஜி எழுந்து நின்று அனைவரையும் வரவேற்றுப் பேசினார். ஒவ்வொருவராக எழுந்து தங்களை அறிமுகப்படுத்துமாறு வேண்டினார்.

1. விவேக் - தமிழ்நாடு
2. ஜானிபால் - கேரளா
3. விசால் - ஆந்திரா
4. சலீம் - காஷ்மீர்
5. ஜகத்சிங் - பஞ்சாப்

6. நரேன் - வங்காளம்
7. கிஷோர் - குஜராத்
8. சந்திரகாந்த் - ஒரிஸ்ஸா
9. சியாம் - டில்லி
10. பரத் - மகாராஷ்டிரா
11. மேத்தா - ராஜஸ்தான்
12. சாந்தகுமார் - ஹிமாசல் பிரதேஷ்

தங்கள் பெயர், மாநிலம், பெற்றோர், படிக்கும் பள்ளி, அவர்களுக்குப் பிடித்த துறை என்று மற்றவர்களுக்குத் தங்களை அறிமுகப்படுத்திய பின்பு விருந்து ஆரம்பித்தது. குட்டி இந்தியாவே அங்கு குழுமி இருந்தது. ஜாதி மத பேதமின்றி இளைய பாரதத்தினர் இணைந்து தோழர்களாகி விட்ட காட்சி அற்புதமாக இருந்தது. இந்தியர்கள் அனைவருமே என்றுமே இப்படி இருந்து விட்டால் எப்படி இருக்கும்! இனி வரும் தலைமுறையாவது இதைச் செயலாக்குமா என்று திரு. பரேக்ஜி ஏக்கப் பெருமூச்சு விட்டார். ஏன், மற்றவர்களின் முகங்களைப் பார்த்தாலும், அதே நினைப்பு ஓடியது என்று கண்டு கொள்ள முடிந்தது.

சிறுவர்கள் வெகு எளிதில் நண்பர்களாகி, பேசிய படி சாப்பிடத் துவங்கினர். தென்னிந்தியர்களான விவேக், ஜானி, விசால் மூவருக்கும் அந்த உணவுகள் புதியதாகவே இருந்தன.

குஜராத்தி வகை விருந்தில் நிறைய இனிப்பு வகைகள் இருந்தன. பின் ஏதேதோ புதுப் பலகாரங்கள். சிலவற்றை எப்படி சாப்பிடுவது என்றும் புரியவில்லை. சின்னச் சின்ன பூரிகளைத் தட்டில் போட்டபடி இருந்தனர். பருப்பையும் இனிப்பு கலந்து ரசம் போலவே ருசித்துக் குடித்தார்கள்.

மாறுதலான உணவு எதையும் உண்ணப் பழக வேண்டும். இவர்கள் தயக்கம் அறிந்து பரத்தும் கிஷோரும் உதவிக்கு வந்தனர். இது இன்ன வகை என்று கூறி எதை எப்படிச் சேர்த்துச் சாப்பிடுவது என்று கற்றுத் தந்தனர்.

அங்கு பெரும்பாலும் ஹிந்தி, குஜராத்தி பேச்சுகளே அதிகம் இருந்தன. மாணவர்களுக்கு ஆங்கிலம் தெரியும் என்றாலும், வடநாட்டில் பெரியவர்கள் அவ்வளவு சரளமாகப் பேசவில்லை. பாஷை தெரியாவிட்டாலும் அவர்களின் கனிவான பார்வையில் பாதுகாப்பை உணர்ந்தான் விவேக். கூடவே சிந்தித்தான். மொழிகளால் உறவுகள் ஏன் தடைப்பட்டுப் போக

வேண்டும்? ஒவ்வொரு சகோதர மொழிக்கும் மரியாதை கொடுத்துப் பாரத மொழியான ஹிந்தியை அனைவரும் தெரிந்து கொண்டால் துணைக் கண்டத்து மக்கள் அனைவரையும் அது இணைத்து விடுமே!

விருந்து முடிந்ததும், அயல் நாட்டில் நம் இந்தியப் பண்பாட்டைக் காப்பாற்றும் வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்றும், அவர்களிடம் மிகுந்த வரவேற்பை எதிர்பார்க்கக் கூடாது என்றும், அவர்கள் மனம் அறிந்து கஷ்டப் படுத்தாத வகையில் நடந்து கொள்ள வேண்டும் என்றும் கூறினார் பரேக்ஜி.

27 நாள் பயணத்தில் நாளை அதிகாலை 2 மணிக்கு ஏர் இந்தியா மூலம் புறப்படுகிறோம். சிங்கப்பூர் ஏர்லைன்ஸுக்கும், ஆஸ்திரேலியா விமானத்துறைக்கும் சற்று நிலைமை சரியில்லாததால், ஏர் இந்தியா தாய்லாந்தை அடைந்ததும், அங்கிருந்து பாகிஸ்தான் விமானம் மூலம் சிங்கப்பூரை அடைந்து, சிங்கப்பூரிலிருந்து "குவான்டாஸ்" எனும் ஆஸ்திரேலிய விமானம் மூலம் பயணத்தை ஆரம்பிக்கிறோம்.

"ஆஸ்திரேலியாவின் முக்கிய நகரங்களான பெர்த், அடிலேய்டு, மெல்பர்ன், ஸிட்னி, கேன்பெரா, பெலாரட் – பென்டிகோ, ஹோபர்ட், பிரிஸ்பன் ஆகியவற்றில் 3 நாட்கள் வீதம் ஒவ்வொரு ஆஸ்திரேலியக் குடும்பத்துடன் ஒவ்வொரு நகரிலும் தங்கப் போகிறோம். ஒவ்வொரு உறுப்பினர் வீட்டிலும் இருவர் தங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நடுவில் ஒரு நாள் நம் குழு அனைவரும் ஒன்று சேர்ந்து நகரைச் சுற்றிப் பார்க்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது" – விரிவாக விளக்கினார் பரேக்ஜி.

அழகாக பிரின்ட் செய்யப்பட்ட காகிதத்தில் ஒவ்வொரு ஜோடியும் யார் வீட்டில் தங்கப் போகிறார்கள் என்றும், குரூப் டுருக்குச் சந்திக்கும் இடம், நேரம், மீண்டும் திரும்பும் நேரம் எல்லாம் தெளிவாகக் குறிக்கப் பட்டிருந்தன.

"அந்தந்தக் குடும்பத்துடன் இருக்கும் போது அவர்கள் விருந்தாளிகள் மட்டும் அல்லாமல், வீட்டின் ஒரு உறுப்பினராகவே ஆகி விடுகிறார்கள். அவர்களின் கலாசாரத்தை, நாகரீகங்களைப் புரிந்து கொள்கிறோம். அந்நிய நாட்டில் அவர்களின் பாதுகாப்பில் இருக்கும் போது, அவர்களின் உறவினர்களாகவே ஆகிவிடும் போது உலக சமாதானத்தை எவ்வளவு விரைவில் எட்டிப் பிடிக்கிறோம் !"

பரேக்ஜி பேசப் பேச நெஞ்சம் நெகிழ்ந்து போனது. அவர் கூறுவது எவ்வளவு உண்மை! அவரை பாய்ஜி (சகோதரர் எனும் பொருள் பட) என்றே அனைவரும் அழைத்தனர். நண்பர்கள் நாளை சந்திக்கலாம் என விடை பெற்றுக் கொண்டனர். தங்களுடன் தங்கும் ஜோடி யார் என்று லிஸ்டைப் பார்த்து அறிந்து, அவர்களுடன் கை கொடுத்துக் கொண்டனர்.

விவேக்கின் ஜோடி டில்லியைச் சேர்ந்த சியாம் என அறிவிக்கப் பட்டது. பெற்றோரும் பாதுகாப்பானவர்களின் பொறுப்பில் குழந்தைகளை ஒப்படைத்த தைரியத்தில் நிம்மதியாகக் கிளம்பினர்.

3. இந்திய மண்ணை விட்டு...

அதிகாலை 3 மணி அளவில் தொடங்கியது பயணம். ஏர் இண்டியாவின் அன்பான அரவணைப்பில் தலைநகரான டில்லியைத் தொட்டுவிட்டுத் தாய்லாந்திற்கு பாய்ஜி-பிரபா தலைமையில் விவேக்குடன் 11 சிறுவர்களும் பறந்து கொண்டிருந்தனர்.

தாய் நாட்டை விட்டுக் கிளம்பும்போது இனம் புரியாத வருத்தம் எட்டிப் பார்த்தது விவேக்கிற்கு. அருகில் இருந்த சியாம் புன்னகைத்ததும் தன்னைத் திடப்படுத்திக் கொண்டான்.

“என்ன விவேக், ஹோம் சிக்கா?” சியாம் கேட்டதும் ஆச்சரியத்துடன் அவனைப் பார்த்தான் விவேக்.

“யூ நோ, எனக்குத் தமிழ் நன்றாகத் தெரியும். அப்பா 3 வருஷம் மெட்ராஸில் இண்டியன் பேங்க் ரீஜினல் மேனேஜராக இருந்தார். நான் கூட ‘டான்பாஸ்கோ’வில் படித்துக் கொண்டிருந்தேன். பின் அப்பாவிற்கு டெல்லிக்கு மாற்றல் ஆகிவிட்டது. பட் ஐ லவ் மெட்ராஸ்... நேற்றே உன்னிடம் சொல்ல நினைத்தேன். சர்ப்ரைஸ்ஸாக இருக்கட்டும் என்று தான்...”

சியாம் கூறியது சந்தோஷமாக இருந்தது விவேக்கிற்கு. அவன் ஊர் லக்னோ என்றும் தந்தை டெல்லியில் வேலை பார்க்கிறார் என்றும் கூறினானே தவிர, இதைப் பற்றிக் கூறவில்லை. ஆங்கிலத்தில் தான் இதுவரை இருவரும் பேசிக் கொண்டிருந்தனர். நினைத்துப் பார்த்து இருவரும் வாய்விட்டுச் சிரித்தனர்.

தாய்லாந்தில் இறங்கி, பாகிஸ்தான் விமானத்திற்குக் காத்திருந்தனர்.

சற்றுக் குள்ளமாகச் சிவந்த நிறத்துடனும் பொடிக் கண்களுடனும் மங்கோலிய இனத் தாய்லாந்து மக்கள் சுறுசுறுப்பாக வேலையில் மும்மரமாக இருந்தனர். விவேக்கும் சியாமும் அங்கு ஒரு படம் எடுத்துக் கொண்டனர்.

பாகிஸ்தான் ஏர்லைன்ஸில் நுழைந்ததும் பாகிஸ்தானிய இசை மெல்லிதாக மிதந்து வந்தது. அன்றைய பயணிகள் நம் நாட்டுச் சிறுவர் குழுவினர் மட்டும்தான். நிறைய சீட்டுகள் காலியாக

இருந்தன. பாகிஸ்தான் விமானப் பணிப் பெண்களும் மிகக் கனிவாக நடந்து கொண்டார்கள்.

“நாம் அவர்கள் விமானத்தில் பயணம் செய்கிறோம். இப்படியே பகைமை இல்லாமல் இந்தியாவும் பாகிஸ்தானும் இருக்கக் கூடாதா என்று இருக்கிறது!” என்றான் விவேக். சியாம் அதை ஆமோதித்தான்.

பெரும்பாலும் சைவ உணவு சாப்பிடுபவர்கள் என்றதும், மொகலாய உணவில் கலந்திருந்த அசைவங்களை அகற்றி விட்டு, சைவ உணவாக ஆக்கி உபசரித்தார்கள்.

பாய்ஜியின் மனைவி பிரபா பாலாடைக் கட்டியான சீஸ் கூடச் சேர்த்துக் கொள்வதில்லை. அத்தனை சைவம்.

மதியம் சிங்கப்பூரை அடைந்ததும், மாலை 7 மணி வரை புகழ் பெற்ற ‘சங்கய்’ ஏர்போர்டில் ஆஸ்திரேலிய விமானத்திற்காகக் காத்திருந்தனர்.

சிங்கப்பூர் சங்கய் ஏர்போர்ட் மிக அழகாக, நவீனமாக இருந்தது. மிகப் பெரிய விமான நிலையம். அங்கேயே ட்யூட்டி ப்ரீ ஷாப்புகளில் கண்ணைக் கவரும் விற்பனைப் பொருட்கள் மனத்தை ஈர்த்தன. அழகு மிளிரும் ஃபவுண்ட்டன்கள், பெரிய பெரிய எஸ்கலேட்டர்கள், திரைப்படக் காட்சிகள் எல்லாமே இருந்தன. சிறுவர்களுக்கான சின்ன விளையாட்டுத் திடல். அங்கே நேரம் போனதே தெரியவில்லை.

பெரும்பாலான சிறுவர்களுக்கு இது முதல் பயணம் ஆனதால், முதலில் எஸ்கலேட்டர்களில் கால் வைக்கத் தடுமாறினார்கள். பழகி விட்டதும் நடைபாதை எஸ்கலேட்டர்களில் இங்கும் அங்கும் போய்க் கொண்டிருந்தனர்.

வரும் போது 2 நாட்கள் சிங்கப்பூரில் இருப்போம் என்றதும், யாரும் எதையும் வாங்கவில்லை. எலக்ட்ரானிக் பொம்மைக் கருவிகளை ஆசையுடன் நோட்டம் விட்டனர்.

மாலை மணி 7. பிரம்மாண்டமான தன் இறகுகளை விரித்தபடி குவான்டாஸ் எனும் ஆஸ்திரேலிய நாட்டு விமானம் கங்காருவைச் சின்னமாகப் பதித்தபடி தயாராகக் காத்திருந்தது.

‘ஹலோ...’ என்று இனிய குரலில் வரவேற்பு. மிகப் பெரிய விமானம் ஆதலால், விசாலமான நிறைய இருக்கைகள். காலை முழுவதும் பயணம் செய்ததில் களைத்திருந்ததால் நன்றாகச் சாய்ந்து இயர் போனை மாட்டி இசையை ரசிக்கத் தொடங்கினர்.

வழக்கம் போல் ஆபத்துக் காலத்தில் தப்பிச் செல்லும் வழிகளை விளக்கிப் பின் வீடியோவில் படம் போடப்பட்டது. வறுத்த கடலையும் ‘கோக்கும்’ அடிக்கடி தந்தார்கள். டி.வி.யில் இடையிடையே நாம் எவ்வளவு உயரத்தில் எந்த இடத்தில் பறந்து கொண்டிருக்கிறோம் என்று வரை படம் போட்டுக் காட்டினார்கள்.

அலுப்பே தட்டாது விமானப் பணியாளர்கள் ஏதாவது சொல்லிச் சிரிக்க வைத்தபடி தங்கள் வேலையைச் செய்து கொண்டிருந்தார்கள். எப்போதும் புன்சிரிப்பு. ஆஸ்திரேலியர்களுக்குக் கலகலப்பாக இருப்பது பிடிக்கும் போலும் என்று நினைத்துக் கொண்டான் விவேக்.

வெஜிடேரியன் என்று லேபிள் ஒட்டி அவர்களின் பெயரும் எழுதி இரவு உணவு இவர்களுக்கென ஸ்பெஷலாக வந்தது. ஐஸ் கிரீமும் சாண்ட்விச்சும் மிகவும் பிடித்திருந்தது. ஆஸ்திரேலியாவின் பால் பொருட்கள் பெயர் போனதல்லவா?

அதிகாலை 2 மணி அளவில் மேற்கு ஆஸ்திரேலியாவின் தலைநகரான பெர்த்தில் விமானம் இறங்கிக் கொண்டிருந்தது. கீழே இறங்க இறங்கப் பளபளக்கும் நகர விளக்குகள் கண்ணைப் பறித்தன.

சியாம் நன்றாகத் தூங்கிக் கொண்டிருந்தான். விவேக் அவனைத் தட்டி எழுப்பி சீட் பெல்ட்டுகளைப் போடச் சொன்னான்.

இமிக்ரேஷன், கஸ்டம்ஸ் செக் எல்லாம் முடிந்து டிராலிகளை எடுத்துக் கொண்டு சுழன்று வரும் பெல்ட்டில் தங்கள் பெட்டிகளுக்காகக் காத்திருந்தனர். அநேகமாக அனைவரும் தங்கள் லக்கேஜ்களுடன் புறப்பட்டு விட்டனர். விவேக், சியாம், மேத்தா, சாந்தகுமார் இவர்களின் பெட்டிகள் வந்தபாடில்லை. விசாரித்த போது அடுத்த குவான்டாஸில் வரலாம் என்றதும் காத்திருந்தனர். அதிலும் வரவில்லை.

விமான நிலையத்தில் ஆறுதல் சொன்னார்கள். எப்படியும் மீட்டுத் தருவதாகக் கூறி அவர்களின் விலாசங்களைக் குறித்துக் கொண்டனர்.

ஏமாற்றத்துடன் வெளியே வந்தபோது, பாய்ஜி ஆறுதல் கூறினார். இது மாதிரி சில சமயம் நடந்து விடும். கட்டாயம் கண்டு பிடித்துத் தருவார்கள் என்று கூறிவிட்டு, அவர்களை விருந்தாளிகளாய் ஏற்றுக் கொள்ளப் போகும் பெண்ணான திருமதி மொரீனை அறிமுகப் படுத்தினார். அனைவரையும் ஒவ்வொரு ஹோஸ்டாக வந்து ஏதோ தங்கள் சொந்தக்காரர்களைப் போல் அழைத்துப் போனார்கள்.

பாவம், அந்த நடுநிசி வேளையிலும் இவர்களுக்காகக் காத்திருந்தது கஷ்டமாக இருந்தது.

50 வயதுள்ள மொரீனே டிரைவ் செய்ய அமர்ந்தார். சீட்டில் பெல்ட்டுகளைப் போடச்சொன்னார். புதிய அனுபவம். இழுத்து இழுத்துப் பார்த்துச் சரியாய்ப் போட வரவில்லை.

மொரீனே போட்டு விட்டார்.

இருவரிடமும் பேசிக் கொண்டே காரை ஓட்டினார். போக்குவரத்தே இல்லாத சாலைகளில் கூட அந்த நள்ளிரவிலும் சிக்னலுக்குக் காத்திருந்தே ஸ்டார்ட் செய்தார்.

“நம் ஊரில் one way (ஒன் வே) என்றாலும் பட்டப்பகலில் பார்க்காமல் ஓட்டி விடுவார்களே, விவேக்!” என்றான், சியாம்.

விவேக் சிரித்துக் கொண்டான்.

கார் போய்க் கொண்டே இருந்தது. 20 மைல் தூரமாவது வந்திருப்பார்கள். கால் மணி நேரம் தான் ஆகியிருந்தது. டிராபிக் இல்லாமலும், நல்ல ரோடும் இருந்தால் எவ்வளவு ஜோராகப் போகலாம்!

“விவேக், சியாம்! உங்கள் இருவரையும் என் மகள் வீட்டில் தங்க வைக்கப் போகிறேன். என் மகள் ஜாக்கியும், எர்ரிக்கும் 8 வருடமாகச் சேர்ந்து வாழ்கிறார்கள். நாளை நடக்கும் கெட்டுகெதருக்கு (Get together) வந்து விடுங்கள். என் வீட்டில் விருந்தாளிகள் அதிகம். அதனால் உங்களை அங்கு அழைத்துப் போகிறேன்.”

“இட்ஸ் ஓ.கே. ஆன்ட்டி. எங்கிருந்தால் என்ன?”

“நகரம் வந்துவிட்டது. இது பெர்த்துடன் இணைந்த ப்ரீமாண்டில் எனும் நகரம்.” பேசியபடி கைவசம் இருந்த மேப்பின் உதவியுடன்

தன் மகள் உள்ள இடத்தைக் குறிப்பிட்டுச் சொல்லிக் கொண்டார் மொரீன்.

நகரம் அமைதியாக உறங்கிக் கொண்டிருந்தது. தெருவில் கடைகள் எல்லாம் ஷட்டர் போடாமல், வெறும் கண்ணாடிக் கதவுகள் மட்டும் போட்டு, உள்ளே உள்ளதைப் பார்க்கும்படி வைக்கப்பட்டு இருந்தன.

வியப்பாக இருந்தது இருவருக்கும், வாட்ச்மேன் கூட இல்லையே.

4. பெர்த்தில் பிள்ளைகள்

எர்ரிக், ஜாக்கி தம்பதியிடம் இவர்களை ஒப்படைத்துவிட்டுக் கிளம்பினார் மொரீன்.

அவர்களுக்கெனத் தரப்பட்ட அறையில் நன்றாகத் தூங்கி விட்டார்கள்.

காலையில் எழுந்து கீழே வந்தனர். “குட் மார்னிங்! நன்றாகத் தூங்கினீர்களா?” என்று கேட்டுவிட்டு 5 நிமிடத்தில் அட்டைப்பெட்டியில் பால் வாங்கி வந்தான் எர்ரிக். சுத்தமாக்கப்பட்ட பால் ஆதலால் காய்ச்சவே வேண்டாமாம்.

பிரெட்டும் கார்ன்ப்ளேக்ஸும் தந்தான்.

ஒரு நொடியில் காபி கலந்து தந்தான். அவனே எல்லாம் செய்வதைப் பார்க்கப் பாவமாக இருந்தது. ஜாக்கி இன்னுமா தூங்குகிறாள்? தம் வீட்டில் அம்மாதான் பரிமாறுவாள். அதுவும் சமையல்காரர் எல்லாம் செய்து வைத்ததைத் தான்.

ஜாக்கி வந்து கூட ஹெல்ப் பண்ணினால் என்ன? சியாம் கிசுகிசுத்தான்.

“இது அவர்களுக்குப் பழக்கமாக இருக்கும்,” என்றான் விவேக்.

அவர்கள் படிப்பைப் பற்றி நிறையக் கேட்டான் எர்ரிக். கிதார் ஒன்றை எடுத்து வந்து வாசிக்க ஆரம்பித்தான்.

“ஒண்டர்புல்!” இருவரும் கை தட்டினார்கள்.

“நான் ஒரு இசைக் கலைஞன். அடிக்கடி இசை நிகழ்ச்சிகளுக்குப் போவேன். எனக்கு இன்னும் வேலை கிடைக்கவில்லை. ஜாக்கி படித்துக்கொண்டு இருக்கிறாள். வேலை அற்றவர்களுக்கு அரசாங்கம் உதவிப் பணம் தருகிறது. அதில் வாழ்க்கை நடத்துகிறோம். பொதுவாக டீன் ஏஜ் வந்ததும் பெற்றோர்ளை விட்டுப் பிரிந்து விடுவோம். எங்களுக்கெனத் தனி வாழ்க்கையை அமைத்துக் கொள்வோம். உங்கள் இந்தியாவில் வாழ்க்கை முற்றிலும் வேறு இல்லையா?”

“பெற்றோரை விட்டுப்பிரிவதா!.... அப்பாவின் பாட்டி கூட எங்களுடன்தான் இருக்கிறார்!” என்று வீட்டில் மூத்தவர்களுக்குத் தரும் மதிப்பை உணர்த்தினான் சியாம். ஜாக்கி கீழே வந்ததும் எல்லோருமாகச் சேர்ந்து வெளியே கிளம்பினார்கள். முதன்முறையாக அயல் நாட்டை நோட்டம் விட்டார்கள். நகரம் மிக அமைதியாக இருந்தது. வீடுகள், தெருக்கள் வரிசையாக ஸ்கெட்ச் எடுத்து வரைந்தது போல இருந்தன. மிகச் சுத்தம். குழந்தைகள் விளையாடும் லிகோ செட்டில் அழகான குட்டி வீடுகள் இருக்குமே, அது போல இருந்தன வீடுகள்.

பெர்த்திற்குச் செல்லும் பெர்ரி யார்டில் சற்று இளைப்பாறினார்கள். சீ கல் எனும் வெந்நிறக் கடல் பறவைகள் ஏராளமாகச் சூழ்ந்து இருந்தன. பார்க்க அழகாக இருந்தது. நம் ஊர்க் காக்கைகளைப் போல சிப்ஸ், பிஸ்கட் எது போட்டாலும் கொத்திக் கொண்டு போயின.

ஷாப்பிங் சென்டர் பக்கம் சென்றார்கள். அந்த அலுவலக நேரத்திலும் அமைதியாகவே இருந்தது நகரம். அவர்களுக்கு மாற்றிக் கொள்ள உடைகளும், டாய்லெட் சாமான்களும் வாங்க வேண்டியதாக இருந்தது அப்போது.

பெட்டிகள் பறிபோனதில் கவலையாக இருந்த குழந்தைகளுக்கு பெர்த் விமான நிலையத்தில் இருந்து போன் வந்தது. விரைவில் உடைமைகள் வந்துவிடும் என்றும், தற்சமயம் உபயோகிக்க டிரெஸ், டாய்லெட் சாமான்கள் வாங்க ஆளுக்கு 100 டாலர் தருகிறோம் என்றும் கூறினார்கள். அது அவர்களுக்கு ஆறுதலாக இருந்தது. வெளிநாட்டுப் பயணிகளுக்கு எவ்வளவு சலுகைகள் செய்கிறார்கள் என்று வியப்படைந்தார்கள்.

“100 டாலர் என்றால் நம் ரூபாய்க்கு எவ்வளவு பெரிய தொகை வருகிறது பார், விவேக்” சியாம் கூற –

“அது நம் நாட்டுக் கணக்குப்படி இங்கு இவர்களுக்கு ரூபாய் 100 மாதிரிதான்... அதற்குள் செலவு பண்ண வேண்டும் தெரியுமா?” என்றான் விவேக்.

இரவு பார்ட்டிக்குப் புதிதாக வாங்கிய உடையில் டிரெஸ் செய்து தயாரானார்கள். மொரீன் வந்து அழைத்துப் போனார். கூடவே ஒரு உணவு வகையும் கொண்டு வந்தார்.

அவர்கள் போய் இறங்கியதும் ஜானி, விசால், சலீம், ஜகத் இப்படி ஒவ்வொரு ஜோடியாகத் தங்கள் ஹோஸ்டுகளுடனும் அவர்கள் குழந்தைகளுடனும் இறங்கிக் கொண்டிருந்தார்கள்.

வீடு சற்றுப் பெரியதாக, நவீனங்களுடன் இருந்தது. உள்ளே பெரிய நீச்சல் குளம். அதைச் சுற்றி சேர்கள் போடப்பட்டிருந்தன. அனைவரையும் தங்கள் பெயரை எழுதிச் சட்டைகளில் ஒட்டிக்கொள்ளச் சொன்னார்கள். இவர்களும் அவர்களுமாய்த் தங்கள் ஹோஸ்டுகளை அறிமுகப்படுத்திக் கொண்டனர்.

அந்த இனிய மாலைப் பொழுது மிகக் குதூகலமாக இருந்தது. எத்தனை பேருடன் அறிமுகம் ஆகிவிட்டார்கள்! உற்சாகத்துடன் குழந்தைகள் அனைவருடனும் உரையாடிக் கொண்டிருந்தனர்.

பாய்ஜி தன் ஹோஸ்டுடன் இறங்கி வந்து கொண்டிருந்தார். குழந்தைகள் போய் 'நமஸ்தே' சொல்லிக் கூடவே அழைத்து வந்தனர்.

அனைவர் வீட்டு உணவு வகைகளையும் மேஜையில் வைத்து அரேன்ஜ் செய்தார்கள். Buffet பார்ட்டி ஆரம்பித்தது.

அருகே ஒரு மரத்தின் கீழ், செங்கல்லினால் ஆன மேடையில் அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. ஒரு பெண் பெரிய கம்பியில் இறைச்சிகளைச் சுட்டு எடுத்துக் கொண்டிருந்தார். அதை 'பார்பிக்யூ' என்பார்களாம்.

பெரும்பாலும் நீருக்குப் பதில் 'கோக்கும்', ஆரஞ்சு ஜூஸுமே குடித்தார்கள். சிறுவர்களுக்கு மிகவும் பிடித்துப் போனது.

பார்ட்டி முடிந்ததும் பாய்ஜி நன்றி கூற, ஆஸ்திரேலிய உறுப்பினர் எப்போதும் நாம் அனைவரும் நல்ல உறவுடன் இருக்க வேண்டும் என்று பேசினார். கூடவே ஒரு வேண்டுகோளும் வந்தது. இந்தியன் மியூசிக், டான்ஸ் பார்க்க ஆசைப்படுவதாகவும் தெரிந்தவர்கள் பாடிக் காட்டவேண்டும் என்றும் கேட்டார்கள்.

"பாய்ஜி! விவேக் நன்றாகப் பாடுவான்!" என்றான் சியாம்.

"இப்போது தான் சங்கீதம் கற்று வருகிறேன். தயக்கமாக இருக்கிறது பாய்ஜி!" என்று யோசித்தான் விவேக்.

"நோ, பேட்டா. எவ்வளவு பிரியமாகக் கேட்கிறார்கள் பார். நம் நாட்டுச் சங்கீதத்தைத் தெரிந்து கொள்ள வேண்டாமா?" பாய்ஜி

வற்புறுத்த, “ஸாரி... கப... தஸ்... நித” என்ற ஸ்வர ஜதியைத் தன் இனிமையான குரலில் தாளம் போட்டுப் பாடினான் விவேக். மிகவும் ரசித்து இவர்களும் தாளம் போட ஆரம்பித்தனர்.

கிஷோர் குஜராத் டான்ஸை ஆடிக் காட்ட, சலீம் மிமிக்ரி பண்ணிக் காட்டினான். ஒரே கைதட்டல்.

ஆஸ்திரேலியர்களும் சேர்ந்து கோரஸ்ஸாக ஆங்கிலப் பாடல் ஒன்றைப் பாடினார்கள். பார்ட்டி கலகலப்பாக முடிந்தது.

மறுநாள் இளம் தூறல் விழுந்து கொண்டிருக்க, பிரபலமான ‘ஸ்வான் லேக்’கினை கேப்டன் குக் என்ற படகில் வலம் வந்து கொண்டிருந்தனர் நம் இளைய பாரதக் குழுவினர்.

லேக்கில் கறுப்பு அன்னங்கள் சிவந்த அலகுகளுடன் நீந்தியபடி ‘ஹலோ’ எனும் பாணியில் கழுத்தைச் சாய்த்தன. விவேக், சியாம், சலீம் எல்லோரும் அதைப் போன்றே கழுத்தை வளைத்து ஹலோ சொல்லிச் சிரித்தனர். பாய்ஜியும் அவர் மனைவி பிரபாவதியும் அவர்களை ரசித்தபடி பார்த்துக் கொண்டிருந்தனர். லேக்கின் இருபுறமும் கோடீஸ்வரர்களின் பெரிய பங்களாக்கள். பார்க்க நன்றாக இருந்தது.

போட்டில் இருந்து இறங்கி கோச்சில் பெர்த் நகரைச் சுற்றி வந்தார்கள். பெரிய கட்டடங்கள், பாங்குகள், கடைவீதிகள் எல்லாம் பார்த்தாகி விட்டது.

இரவு எர்ரிக் ஜாக்கி தம்பதிக்கு நன்றி கூறிவிட்டு, பரிசுப் பொருட்களைத் தந்தார்கள்.

“உங்களுக்கும் ஒரு சந்தோஷமான செய்தி. உங்கள் பெட்டிகள் கிடைத்து விட்டன. அது தாய்லாந்திலிருந்து ஹாங்காங் லக்கேஜ்களுடன் சேர்ந்து விட்டதாம். இப்போதுதான் போன் வந்தது. நாளை அடிலெய்ட் செல்லும் முன்பு ஏர் போர்ட்டில் கலெக்ட் பண்ணிக் கொள்ளச் சொன்னார்கள்.” எர்ரிக் கூறிய நல்ல செய்தியைக் கேட்டு விவேக்கும் சியாமும் ஆண்டவனுக்கு நன்றி கூறினர்.

“ஸோ, உங்களுக்குக் கிடைத்த இந்த டிரெஸ்கள் எங்கள் நாட்டின் அன்பளிப்பு. இந்த ப்ரீமாண்ட்டில் காற்றை டாக்டர்ஸ் விண்ட் என்பார்கள். அந்த ஆரோக்யக் காற்று அதிர்ஷ்டக் காற்றாக

உங்களுக்கு அடிக்கிறது!” ஜாக்கி கூறியதை ரசித்துச் சிரித்தார்கள் அனைவரும்.

அடிலெய்ட் அடைந்ததும் விமான நிலையத்திற்கு இவர்கள் ஹோஸ்ட் வரவில்லை. இன்னொரு பெண், அவர்கள் ஹோஸ்ட் ராபின் வேலைக்குச் சென்றிருப்பதாகவும், வீட்டில் லக்கேஜ்களை வைத்து விட்டு ஊரைப் பார்க்கலாம் என்றும் கூறி அழைத்துப் போனார்.

இப்போது கார் பெல்ட் போடப் பழகிவிட்டார்கள். ஒவ்வொரு ரோட்டிலும் நடப்பவர்கள் சிக்னலுக்காக பட்டனை அமுக்கி சிக்னல் கிடைத்தவுடன்தான் ரோட்டைக் கடந்தனர். “இது நல்ல பழக்கம். எத்தனை விபத்துக்களைத் தடுக்கலாம் பார்!”

“ஆமாம். நம்நாட்டில் போய் இது பற்றி நிறையச் சொல்ல வேண்டும் விவேக்,” என்றான் சியாம்.

மியூசியம், ஆர்ட் காலரி சென்றனர் முதலில். நம் ஊரின் பழமையான சரித்திரங்களும், புராதனங்களும் இல்லை. இவர்களின் 100, 200 வருடச் சரித்திரத்தை மிகவும் போற்றிப் பாதுகாக்கிறார்கள்.

ஆர்ட் காலரியில் அலுப்புத்தட்டவில்லை. அமைதி...சுத்தம். ஆங்காங்கே அமர்ந்து ரசிக்க இருக்கைகள். உடன் வரும் குழந்தைகளுக்கு போரடிக்காமல் இருக்க ஃபவுண்ட்டன்கள். அவசரம் என்று ஓடாமல் எல்லாப் பகுதிகளிலும் சுத்தமான டாய்லெட்கள். தேவையாவும் இருந்து விட்டால் எத்தனை நிதானமாக ரசிக்கலாம். நம்முடைய புராதனங்கள், நுண் கலைகள் சரியாகப் பராமரிக்காமல் இருப்பது குறித்து வேதனைப்பட்டார்கள் சிறுவர்கள்.

ஆஸ்திரேலியாவில் நிறைய இந்திய முகங்கள் தெரிந்தன. யுனிவர்ஸிடி அருகே நிறையப் பேரைப் பார்க்க முடிந்தது. ஜப்பான், சீனாவைச் சேர்ந்தவர்கள் நிறையக் குடியேறியுள்ளதாக ராபினின் தோழி கூறினார்.

ஆஸ்திரேலியர்கள் குறைந்த ஜனத்தொகையையே விரும்புகிறார்களாம். நிறைவான வாழ்வு போய்விடுமே! வேற்று நாட்டவரின் குடி உரிமையை அவ்வளவு விரும்பவில்லை. ‘அபர்ஜனிஸ்’ என்னும் ஆதிவாசிகள்தான் முதலில் இங்கு

வாழ்ந்தார்களாம். பிறகு 'கேப்டன் குக்' என்னும் ஆங்கிலேயரால் ஆஸ்திரேலியா கண்டுபிடிக்கப்பட்டு ஐரோப்பியர்கள் குடியேறினார்களாம்.

பீச்சிற்கு என்று அழகான டிராம்கள் வந்து போய்க் கொண்டு இருந்தன. டிராமில் போவது தனி அனுபவமாக இருந்தது. சிறிய பீச் என்றாலும் கச்சிதமாக இருந்தது. நீச்சல் குளம், மீன் பிடிக்கும் பாலங்கள், ஐஸ் கிரீம் கடைகள் என்று, உல்லாசமாக ரசித்து அனுபவிக்க நிறைய அம்சங்கள் அமைந்திருந்தன. சறுக்கி வந்து விழும் நீச்சல் குளத்தில் நீந்தி மகிழ்ந்தார்கள் விவேக்கும், சியாமும். கட்டிடத்தின் மேலாக இருவராக 'பெடல்' பண்ணி வரும் சைக்கிளில் பெடல் பண்ணி வந்தார்கள்.

பெஸ்டிவல் தியேட்டரின் அருகில் ரிவர்டாரன்ஸ் எனும் சிறிய ஏரியில் பாப்வே போட்டில் ஏறினர். அங்கிருந்து சென்றால் ஜூ, பொட்டானிகல் கார்டன் எல்லாம் போகலாம். இத்தியேட்டரின் அருகிலேயே கிரிக்கெட் மைதானம்.

கிரிக்கெட் பிரியர்களான இருவரும் அடிலெய்ட் ஓவல் மைதானத்தைப் பார்த்து மகிழ்ந்தார்கள். பாப்வே போட்டில் நிறையக் குழந்தைகள் இருந்தார்கள்.

ஜூவில் நிறையப் புது மிருகங்களைப் பார்த்தார்கள். லாம்பேட், பிளாட்டபஸ், கங்காரு, வாலபி (சிறிய கங்காருகள்), கண் கவர் கோலாக்கள் டாஸ்மேனியன் டெவில் என்று. கூடவே எமு, குக்கு பெரா பறவைகள்.

சில கோலா கரடிகளைத்தொட அனுமதித்தார்கள். பொம்மை போன்ற குட்டிக் கரடிகள் ஆஸ்திரேலியர்களைப் போன்றே அன்பானவை.

"இதைத் தூக்கலாம் போல் இருக்கிறது, சியாம்!"

கைடின் உதவியுடன் அதைத் தூக்கிக் கொண்டான் விவேக். கூரிய நகத்தால் இறுக்கிப் பிடித்துக் கொண்டது அவனை. முகத்தில் மற்ற மிருகங்களைப் போல் பரபரப்பே இல்லை. எப்போதும் அமைதியாகப் பார்த்தபடி இருந்தது. யூகலிப்டஸ் இலைகளை மட்டும் தின்றது.

கங்காருவிற்குப் புல்லைப் பறித்துத் தந்தான் சியாம். தத்தி வந்து வாங்கிக் கொண்டது. அதுவும் நட்பான மிருகமே.

பொட்டானிகல் கார்டன், ஜூ, ஆஸ்பத்திரி எல்லாம் பார்த்து விட்டு நடந்தே வந்தார்கள். கால் வலிக்கவே இல்லை, அவர்களுக்கு குப்பைகளோ நெரிசல்களோ இல்லாததால் இந்த உணர்வோ!

கிங் வில்லியம் என்ற பிரபல சாலையில் அவர்களைப் பஸ்ஸில் ஏற்றி விட்டார் ராபினின் தோழி. பஸ் ஸ்டாப்பில் இருந்து மேப்பின் உதவியுடன் ஈஸியாக வீட்டிற்குப் போய் விடலாம். எல்லோரும் மேப் வைத்திருந்தார்கள். மேப்பின் துணையுடன் எங்கு வேண்டுமானாலும் போய் வரலாம். அவ்வளவு கச்சிதம்.

பஸ்ஸில் நெரிசலே இல்லை. டிரைவர் மட்டுமே இருந்தார். டாலர் போட்டு விட்டால் ஆட்டோமேடிக் டிக்கெட் கிடைத்து விடுகிறது.

இரவு மிஸஸ் ராபினின் வீட்டை அடைந்தார்கள். உற்சாகத்தோடு வரவேற்றார் ராபின்.

“வெல்கம் மை டியர் பாய்ஸ். ஊர் பிடித்துள்ளதா?” என்று கேட்டார் ராபின்.

“மிகவும் பிடித்துள்ளது!” என்றார்கள்.

“நானும் இந்தியா வந்துள்ளேன். இந்தியப் பண்பாடு மிகவும் பிடித்துள்ளது எனக்கு.”

“தனியாக இருக்கிறீர்களே; பயமாக இல்லை?” சியாம் கேட்டான்.

“ஹேய்... அதெல்லாம் ஒன்றும் இல்லை. நான் டீச்சராக இருக்கிறேன். என் கணவர் பிரான்ஸில் நாடகத்துறைக்காகப் படிக்கிறார். அதற்கு நிறையப் பணம் வேண்டும். நான் சம்பாதித்து அனுப்பிக் கொண்டிருக்கிறேன்.” நிறையப் பேசினார் ராபின். கூடவே இருவரும் பிளேட் கழுவி அவருக்கு உதவினார்கள்.

“இங்கே எல்லாம் செல்ப் ஹெல்ப்தான். இந்தியா மாதிரி வேலைக்காரர்களை வைத்துக் கொள்ள முடியாது. எல்லாம் நாங்களே செய்து கொள்ள வேண்டும். எல்லோருமே வேலைக்குப் போய் விடுவதால் ஞாயிற்றுக் கிழமைகளில்தான் ஷாப்பிங் போவது, வீட்டைச் சுத்தம் செய்து கொள்வது எல்லாம்.”

மறுநாள் காலை ராபின் வேலைக்குச் சென்று விட்டார். விவேக் அவர் கற்றுத் தந்தபடி பிரெட்டை டோஸ்டரில் போட்டு எடுத்தான்.

“பலே! நன்றாகச் செய்கிறாய், விவேக், இந்தியா போனாலும் இப்படிச் செய்வாயா?” என்றான் சியாம் சிரித்தபடி.

“சமைக்கா விட்டாலும் அம்மாவிற்கு ஹெல்ப்பாவது பண்ண வேண்டும் சியாம். காந்திஜி கூட செல்ப் ஹெல்ப் பற்றி எவ்வளவு சொல்லியுள்ளார்!”

மதியம் பாய்ஜியுடன் எல்லாச் சிறுவர்களும் ஒன்று சேர்ந்து “பரோஸாவேலி” எனும் திராட்சைப் பண்ணைக்கு அடிலெய்ட் கோச்சில் பயணமானார்கள்.

கோச் ரொம்ப வசதியாக பிளேனைப் போலவே இருந்தது. அதிலும் சுத்தமான குடிநீர், சின்ன டாய்லெட், ஜானி அப்போதுதான் டாய்லெட்டிற்குப் போய்விட்டுவந்தான்.

“அப்பாடி! எவ்வளவு வசதியாக உள்ளது! வண்டியைக் கண்ட இடங்களில் நிறுத்தச் சொல்ல வேண்டாம். நம் நாட்டில் கோயில்களில், ஷாப்பிங் சென்டர்களில் டாய்லெட் வசதி இல்லாமல் அவசரத் தேவைக்கு நிம்மதி இல்லாமல் ஓட வேண்டியது உள்ளது. இவர்கள் அதை உணர்ந்து அமைத்து அதையும் எத்தனை சுத்தமாக வைத்திருக்கிறார்கள்!”

‘பரோஸா வேலி’யில் ஏராளமாகத் திராட்சை பயிர் செய்து ரசம் எடுத்துப் பீப்பாய்களில் வைத்து ஒயின்களாக அனுப்புகிறார்கள்.

அதைவிட்டுக் கிளம்பி, பெரிய “ராக்கிங் ஹார்ஸின்” முன்னே வந்து நின்றது கோச். சாய்ந்தாடும் குதிரைப் பொம்மை வடிவை மிகப் பெரிய அளவில் செய்து வைத்திருந்தனர். அதன் தலை வரை ஏறிப் போகலாம்.

சிறுவர்களுக்கு ஒரே உற்சாகம். பக்கத்தில் உள்ள டாய் பாக்டரிக்கும் விஜயம் செய்தார்கள். கண்ணைக் கவரும் பொம்மைகள், மிகச் சிறிய குட்டி கோலாக்கள், கங்காருகள், பேனாக்கள், போஸ்ட் கார்டுகள் நிறையவே இருந்தன. குட்டி கோலா ஒன்றை விவேக்கும், சியாமும் வாங்கிக் கொண்டனர். போஸ்ட்கார்டை வாங்கித் தங்கள் பயணம் பற்றி வீட்டிற்கு எழுதி அனுப்பினார்கள்.

“நம் நாட்டில் எத்தனை சிற்பங்கள், அரண்மனைகள், வேலைப்பாடுகள் காண்பதற்கு உள்ளன! அதை நாம் சரிவரப் பராமரிப்பதில்லை. இவர்கள் செயற்கையாகவாவது மற்றவர்களைக் கவரும் வண்ணம் செய்வதில் எத்தனை முயற்சி எடுத்துக் கொள்கிறார்கள் பாருங்கள்!” பாய்ஜி சொன்னார். இது உண்மைதானே!

அன்று ஞாயிற்றுக் கிழமை. ராபின் வீட்டில் உபயோகமற்ற சாமான்களைத் தன் தோட்டத்தில் விலைக்காக வைத்தார். அதில் வரும் பணத்தைத் தன் கணவனுக்கு அனுப்பப் போகிறாராம்.

செகண்ட் ஹாண்ட் பொருட்களை நிறையப் பேர் வாங்கிக் கொண்டு போனார்கள். அவரை உற்சாகப்படுத்த இவர்களும் சின்னப் பொருட்களை வாங்கிக் கொண்டார்கள்.

இரவு மூவரும் “டான்ஸானியா” எனும் ஆதிவாசிகளான அபர்ஜனிஸ் நடத்தும் தியேட்டருக்குப் போனார்கள். அங்கு அவர்கள் செய்த கைவினைப் பொருட்களைக் காண முடிந்தது. ஒலி எழுப்பும் கருவி, ஆயுதங்கள் எல்லாம் இருந்தன. இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்றதும் பெரிய குழலில் போர் ஓசை, நடன ஓசை, கங்காரு நடனம் என்று ஒலி எழுப்பிக் காட்டினார்கள்.

“யூ ஆர் லக்கி. சாதாரணமாக யாருக்கும் இப்படிச் செய்து காட்ட மாட்டார்கள்!” என்றார் ராபின்.

விசாரித்ததில் இவர்களுக்கும் நம் “தோடர்கள்” இன மக்களுக்கும் தொடர்பு உண்டு என்றார்கள்.

ஆஸ்திரேலியாவில் அங்கங்கே இவர்களைக் காண முடிந்தது. நன்றாகப் படித்துள்ளார்கள். பல சலுகைகள் தந்தும் அரசாங்கத்தை விட்டு ஒதுங்கியே வாழ்கிறார்களாம்.

தியேட்டரின் உள்ளே சென்றதும் சற்று வித்தியாசமாக இருந்தது. சுமார் 100 பேர் மட்டுமே உட்காரும் அளவு வட்ட வடிவில் கட்டையில் ஆன பெஞ்சுகள், “கோக்” டின்களை அடுக்கி வர்ணம் அடித்து, இலைகள் செருகி தென்னை மரங்களாக நிறுத்தி, மூங்கிலில் பரண்கள் அமைத்து எளிமையான, புதுமையான செட்டிங்.

பிலிப்பைன்ஸ் நாட்டுப் பற்றைப் பின்னணியாக வைத்து ஒரு நாடகம். திரைகள் இல்லை. ஸ்டேஜ்கள் இல்லை. நன்றாகவே இருந்தது.

பணத்திற்காக ஒரு ஆங்கிலேயனின் பின் அலையும் கணவனை, பிறந்த மண்ணே பொக்கிஷம் எனத் திருத்துகிறார் மனைவி.

தியேட்டரை விட்டுப் போகும் போது "பூமராங்" எனும் அவர்களின் கைவினைப் பொருளை வாங்கிக் கொண்டார்கள்.

ராபினிடம் விடை பெற்றுக் கொண்டு தென் ஆஸ்திரேலியாவின் தலை நகரான அடிலெய்டை விட்டு விக்டோரியா மாநிலத் தலைநகரான மெல்பர்னுக்குப் பயணம் ஆனார்கள்.

6. ஆஸ்திரேலியக் காந்தி

ஆஸ்திரேலியாவின் நகரங்கள் யாவும் கடற்கரையை ஒட்டியே இருந்தன. பெரும்பாலான நிலம் பாலைவனமாகவே உள்ளது. இந்தியாவைப் போல 3 மடங்கு பெரிதான கண்டத்தில் மக்கள் தொகை நம் ஒரு மாநிலத்தின் அளவுதான்.

ஆஸ்திரேலியாவினை 7 பிரிவாகப் பிரித்து உள்ளார்கள். வடக்கு ஆஸ்திரேலியா, மேற்கு ஆஸ்திரேலியா, தெற்கு ஆஸ்திரேலியா, விக்டோரியா, நியூ சவுத் வேல்ஸ், குவின்ஸ்லாந்து, டாஸ்மேனியா என்று.

மெல்பர்னில் லோரி-கார்டனர் தம்பதிகள் விவேக், சியாமை அழைத்துச் சென்றனர். வீட்டை அடைந்ததும் இவர்களை ஒரு சீனப் பெண் வரவேற்றாள். மோனா எனும் அவள் இவர்களுடன் தங்கிப் படிக்கிறாளாம்.

திடீரென உடல் முழுவதும் ரோமங்களுடன் ஆஸ்திரேலியா ஆடுகளைப் போல் ஒரு நாய் சுற்றிச் சுற்றி வந்தது. சியாம் சற்றுப் பயந்தான்.

“மோனா! வீட்டைச் சுற்றிக் காட்டு. நான் டின்னருக்கு ரெடி பண்ணுகிறேன்,” என்றார் லோரி.

வீடு பெரும்பாலும் கட்டைகளால்தான் செய்யப்பட்டு இருந்தது. சற்று மேடான பகுதியில் உள்ள பங்களாக்களில் இதுவும் ஒன்று.

“இது என்ன, ஒரே பொம்மைகளாக இருக்கிறதே!” ஆச்சரியப்பட்டான் விவேக்.

“லோரி ஆன்ட்டி பப்பட் ஷோ நடத்துகிறார். அவரின் பப்பட் ஷோ மிகவும் பிரபலம் இங்கு.”

“அதோ நம் ஜெய்ப்பூர் மஹாராஜா பொம்மை மாதிரி...” அதன் கால்களைத் தொங்கும் நூல்களால் இழுத்தான் சியாம்.

“வர வேண்டும் இந்தியச் சிறுவர்களே!” என்று பொம்மை கைகால்களை அசைத்தது.

“ஆன்ட்டியும் அங்கிளும் இந்தியா வந்துள்ளார்கள். அப்போது வாங்கியதாம் இது,” என்றாள் மோனா.

“ஹலோ, லெட் அஸ் கோ ஃபார் தி டின்னர்.”

இனிமையான பறவை விவேக்கின் காதில் கிசுகிசுத்தது. திரும்பினான். அழகான பென்குவின் பறவை.

லோரிதான் கையில் பென்குவின் பொம்மையை மாட்டி மூக்கை அசைத்துக் குரல் கொடுத்தார்.

சிறுவர்கள் ரசித்துப் பாராட்டினார்கள். கட்டாயம் தான் நடத்தும் பென்குவின் ஷோவிற்கு அழைத்துப் போவதாக லோரி சொன்னார்.

கஷ்டப்பட்டு புக்கைப் பார்த்து இந்திய உணவு செய்திருந்தார்கள்.

ருசியாகவே இருந்தது. இதற்கு ஏற்ப ஊறுகாய்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்று ஊறுகாயையும், சியாம் கொண்டு வந்த காக்ரா எனும் உலர்ந்த சப்பாத்திகளையும் மேஜையில் வைத்தனர்.

சப்பாத்தி பிடித்தது. ஊறுகாயைப் பார்த்து லோரி ஆன்ட்டி பயந்தார். ஹாட்… ஹாட்… என்று ஜூஸைக் குடித்தபடி இருந்தார்.

வீட்டில் பியானோ, வயலின் எல்லாம் இருந்தன. திரு.கார்டனருக்கு மியூசிக் ரொம்பப் பிடிக்குமாம். தான் தமிழ்நாடு வரை வந்ததாகவும் அடிக்கடி குறிப்பிட்டார். விவேக்கிற்குப் பெருமையாக இருந்தது. விவேக்கின் கர்நாடக சங்கீத இசையை மிகவும் ரசித்து வயலினில் வாசித்து டேப் செய்து கொண்டார்.

“உங்களுக்கு லால்குடி ஜெயராமனின் வயலினை டேப்பண்ணி அனுப்புகிறேன்! அங்கிள்” என்றான் விவேக்.

மறுநாள் காலை மோனா, அங்கிள் சிறுவர்கள் வாக்கிங் போனார்கள். அழகான விளையாட்டு மைதானத்தில் நிறையச் சிறுவர்கள் ஃபுட்பால் விளையாடிக் கொண்டு இருந்தனர். சியாம் நன்றாக ஃபுட்பால் விளையாடுவான்.

“என்ன சியாம், விளையாட வேண்டும் போல் உள்ளதா?” என்று கேட்டாள் மோனா.

“வீடு கட்டும்போதே சிறுவர்களுக்காக காலனி அருகே விளையாட்டு மைதானம் ஒன்றை அமைக்க உதவித்தொகையை எல்லா வீட்டிலும் ஏற்பாடு செய்துவிட வேண்டும் என்பது இங்கே கட்டாயம்!” என்றார் கார்டனர்.

ஏக்கப் பெருமூச்சு விட்டான் சியாம். நம் நாட்டில் இது போல் எல்லாம் ஊக்குவித்தால் எத்தனை பெரிய பெரிய சாம்பியன்கள் கிடைப்பார்கள்!

பத்து மணி அளவில் ‘யாரா ‘ரிவர் அருகில் உள்ள பெரிய கட்டடங்கள், தியேட்டர்கள் எல்லாம் பார்த்தனர்.

போக்குவரத்துகள் தடை செய்யப்பட்டு ஷாப்பிங் செய்வதற்கென்றே அமைந்த “மோல்”-ஐ நோக்கி நடந்தனர். பிரம்மாண்டமான மேயர்ஸ் ஷாப்பிங் சென்டரைப் பார்த்தனர். எத்தனை விதக் கடைகள், பொருட்கள், விலைதான் அதிகம்.

ஷாப்பிங்கின் அருகில் அங்கங்கே வண்ணக்குடைகளின் கீழே அமர்ந்து ஐஸ்கிரீம் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். இவர்களும் விடுவார்களா என்ன?

குரூப் டூரில் வில்லியம் ரிக்கர்ட்ஸின் வன சரணாலயத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தனர் சிறுவர்கள்.

கைடு கோச்சை நிறுத்தி புஷ்வாக் போகலாம் என்று அழைத்தார் அந்த அடர் காட்டில் எல்லோரும் சேர்ந்து கொஞ்ச தூரம் நடந்து விட்டு வந்தார்கள். வண்டுகளின் ரீங்காரமும், பறவைகளின் பாட்டுக் குரல்களும் மனத்திற்கு மகிழ்ச்சியை ஊட்டின.

“நாம் ஏன் இது மாதிரி எல்லாம் செய்வதில்லை, விவேக்?” என்றான் சியாம். “எதையும் ரசிக்கிறார்கள் மனமார அனுபவிக்கிறார்கள். அதுதான் நோயே இல்லாமல் ஆரோக்யமாக இருக்கிறார்களோ?” என்றான் விவேக் ஆங்கிலத்தில்.

“யூ ஆர் ரைட், விவேக். நாங்களும் நிறைய வயதானவர்களைப் பார்க்கிறோம், இங்கு எவ்வளவு சுறுசுறுப்பாக வேலை செய்கிறார்கள். கார் ஓட்டுகிறார்கள். நம் ஊர் பாட்டிகள் பேஷண்டுகளாக அல்லவா இருக்கிறார்கள்?” என்றான் கிஷோர்.

“யார் முகத்திலும் கவலைகள் இல்லை. பரபரப்பே இல்லை. தவிர எப்போதும் ‘ஹலோ’, ‘தேங்க்யூ’ சொல்லாமல் இருப்பதில்லை!” என்றன் விசால்.

“இங்கே ஏழ்மை கம்மி பார்த்தீர்களா? பணக்கார வர்க்கமும் நடுத்தரமும்தான். கூலி வர்க்கமே இல்லை. போஸ்ட்மேன்களுக்கோ பிளம்பர்களுக்கோ கூட மரியாதை கொடுத்துதான் நடத்துகிறார்கள்.” பேசிக் கொண்டிருந்தவர்களை, “பஃபிங் பில்லி... பாருங்கள்” என உற்சாகத்தோடு அழைத்தார் கைட். என்னவோ ஏதோ என்று பார்த்தவர்கள் மலைப் பாதையில் ஊட்டிக்குப் போகும் குட்டி ரயில் மாதிரி ஒரு ரயில் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். சாந்தகுமாருக்கு சிம்லாவில் தான் பார்க்கும் சின்ன ரயில் ஞாபகம் வந்தது. பயணிகளைப் பார்த்து அனைவரும் உற்சாகத்தோடு கை ஆட்டினார்கள். இது ஒன்றும் புதுமையாகத் தோன்றவில்லை அவர்களுக்கு.

சரணாலயத்தை அடைந்ததும் ஏதோ மிருகங்கள், பறவைகள் இருக்கும் என்று நினைத்தவர்களுக்கு மிகவும் வியக்கத் தகும் வகையில் இருந்தது அந்த இடம். கீழே இருந்து மேலே சிறிய குன்று வரை நிறைய மரங்கள் அடர்ந்து இருந்தன. மரங்கள் ஒவ்வொன்றிலும் அற்புத வேலைப்பாடுகள்.

ஆம்! எல்லாமே ஆதிவாசிகளான அபர்ஜின்ஸ்ஸின் பல்வேறு உருவங்கள். ‘தாயும், சேயும்’, ‘சிறுவர்கள் கூட்டம்’, ‘கங்காருவுடன் சிறுவன்’, ‘பாறைமேல் மரத்தில் முதியவர்’ என்று மிக கலை நுணுக்கத்துடன் மரச் சிற்பங்கள் செதுக்கப்பட்டிருந்தன. யார் செய்தது இந்த அழகான கலைப் படைப்புக்களை! அதோ பாய்ஜியுடன் மெதுவாக நடந்து வரும் ரிக்கார்ட்ஸ் என்ற பெரியவர்தான். 90 வயதான அவர் மிகத் தெம்பாக இருக்கிறார்.

இந்தியர்கள் என்றதும் காந்தியவாதியான பரேக்ஜியைக் கட்டித் தழுவிக் கொண்டார். சிறுவர்களுடன் உற்சாகத்தோடு பேசினார். காந்தி பிறந்த மண்ணைப் பற்றி பெருமையாகக் கூறினார். பூரித்துப் போனார்கள் அனைவரும்.

இவரை ஆஸ்திரேலியாவின் காந்தி என்பார்களாம். ஆதிவாசிகளுக்காகவே தன் வாழ்நாள் முழுவதையும் அர்ப்பணித்துள்ளார். அவர்களையே சிற்பங்களாக வடித்துள்ளார். அரசாங்கம் இவர் சேவையைப் பாராட்டி இந்தக் காட்டின்

இப்பகுதியை இவருக்குப் பரிசளித்து விட்டது. அதுவே இச்சரணாலயம்.

இந்தியாவிற்கும் இவர் விஜயம் செய்துள்ளார். நம் அரசாங்கம் கூட இவருக்கு ‘ஆச்சார்யா’ என்ற பட்டம் அளித்துள்ளதாம்.

குரூப் டூர் முடிந்ததும் நண்பர்களுக்கும் பாய்ஜி-பிரபாவதிக்கும் இனிப்புகளை வழங்கினான் விவேக்.

மறுநாள் தமிழ்ப் புத்தாண்டு பிறக்கப் போவதை அறிவித்தான். பாய்ஜி தம்பதிகளை வணங்கி ஆசிர்வாதமும் பெற்றான்.

‘ஹேப்பி நியூ இயர், விவேக்! அதிகாலையில் அன்போடு அவனை அணைத்து முத்தமிட்டான் சியாம். நெகிழ்ந்து போனான் விவேக்.

கார்டனர், லோரா, மோனாவும் அன்போடு வாழ்த்தினார்கள். பண்டிகை நாளில் பெற்றோரின் நினைவு வந்தாலும் இவர்களின் பாசம் அதை மறக்கச் செய்தது. வெவ்வேறு நாட்டவர்கள் சேர்ந்து கொண்டாடும் உலகக் குடும்பத்தின் பண்டிகை என்றே எண்ணத் தோன்றியது.

“நியூ இயரான இன்று நாம் கல்ப் ஃபார்ம் போகிறோம்” என்று அறிவித்தார் கார்டனர்.

100 வருடங்களுக்கு முன் பால் பண்ணை எப்படி இயங்கியது என்பதை விளக்குவதே இந்த ஃபார்ம்.

ஒருபுறம் இரும்புப் பட்டறை, குதிரைக் கொட்டம், மாட்டுக் கொட்டில், மறுபுறம் சாணை தீட்டுவது, மரச் சக்கரங்களால் தயிர் கடைந்து வெண்ணெய் எடுப்பது, இந்த வேலை செய்வதை வாராவாரம் மக்கள் வந்து பழைய கால வேலை என்று ரசித்துப் பார்ப்பார்களாம். குழந்தைகளுக்கும் காட்டுவார்களாம்.

“இது மாதிரி எத்தனை பட்டறைகள் பார்ப்போம் நம் நாட்டில் ரசிப்போமா?” வியந்தான் விவேக்.

அங்கு ஆண்களும் பெண்களும் கூட பழைய கால ஆங்கிலேய உடைகளை அணிந்து பிரிட்டிஷ் காலத்தை நினைவு படுத்தினார்கள். மிஸ்டர் கார்டனர் வயலின் வாசிக்க, எல்லோரும் கைகோத்து நடனம் ஆடினார்கள்.

விவேக், சியாம், மோனா கூடச் சேர்ந்து கொண்டார்கள். சில சிறுவர்கள் ஏதோ பேப்பர் கட்டிங் செய்ய அதையும் ரசித்தார்கள் பெரியவர்கள்.

சியாம் காகிதத்தில் பலவித உருவங்கள் படைப்பான். காகிதத்தில் மடமடவென்று உருவங்களைச் செய்ததும் பலத்த கைதட்டல்.

“பழைய கால நினைவாக இதைப் பராமரிக்கிறோம்,” என்றார் கார்டனர். பண்ணை வீட்டைப் பார்த்துவிட்டு அருகே உள்ள ஓடையில் அழகான வாத்துகள் நீந்துவதை ரசித்தனர்.

நகரத்தை விட்டு உள்ளே ஆங்காங்கு மாட்டுப் பண்ணைகளும், ஆடுகள் வளர்ப்பும் உள்ளன. பண்ணைகளில் வீடுகள் அமைத்துத் தனியாக வசிக்கிறார்கள். பயம் ஏதும் இல்லையாம். ஒவ்வொன்றும் பத்து மைல் தொலைவில் இருக்கும். பெரும்பாலும் நிலங்கள் காலியாகவே உள்ளன. விவசாயம் என்றால் கூலி ஆட்கள் பிரச்சனை வரும் என்றுதான்.

லோரி நடத்தும் பப்பட் ஷோ காணச் சென்றார்கள். சின்ன ஹால், எல்லா வித நூதன கருவிகளுடன் ஆன திரை.

‘The Frozen Heart’ என்று பொம்மலாட்டம். பஞ்சுகளை ஒட்டவைத்து, பனிப் பிரதேச செட்டிங். லோரியும், ரால்ப் என்பவரும் பென்குவின் பொம்மைகளை இயக்கிக் குரல் கொடுத்தனர்.

அண்டார்டிகாவில் வந்து பென்குவினைப் பிடித்துச் சொந்தம் கொண்டாட நினைப்பவர்களுக்கு அவற்றைச் சுதந்திரமாக விட வேண்டும். அண்டார்டிகா அவைகளுக்கே சொந்தம் என்று வாதிடும் சுற்றுப்புறச் சூழல் பாதுகாப்பை உணர்த்தும் பப்பட் ஷோ. மிக அருமையாக இருந்தது. காண வந்த சிறுவர்களுக்குப் போக மனமே இல்லை.

இவர்களை விட்டுப் பிரியக் கஷ்டமாக இருந்தது. விவேக், சியாமிற்கு, லோரி பேக் பண்ணுவதில் ஹெல்ப் பண்ணினார். மோனா இவர்களுக்காக சைனீஸ் நூடுல்ஸ் செய்தாள். கட்டாயம் இந்தியா வருவதாகக் கூறினாள்.

பெலாரட் பெண்டிகோ கோச்சில் போய்க் கொண்டிருந்த விவேக், சியாம் இருவரும் 'பென்குவின் பப்பட் ஷோ' பற்றி தம் நண்பர்களுக்குச் சொல்லிக் கொண்டிருந்தார்கள்.

பெலாரட் யுனிவர்ஸிடியில் இறங்கியதும் அன்போடு வரவேற்றனர். ஆசிரியர்களும் மாணவர்களும்.

பத்திரிகை நிருபர்கள் பேட்டி கண்டு படம் எடுத்தனர்.

பல்கலைக் கழகம் முழுதும் சுற்றிப் பார்த்தனர். பல நாட்டு மாணவர்கள் படித்தனர். அங்கு இந்திய மாணவர்கள் சிலரும் இருந்தனர். கேரளா, தமிழக ஆசிரியர்கள் கூட இருந்தார்கள்.

மாலை பெலாரட் மேயர் தலைமையில் விழா ஒன்று நடப்பதாக இருந்தது. பகலில் ஊரைப் பார்க்க சின்ன வேனில் புறப்பட்டார்கள். இதுவும் சின்ன நகரம் தான். இங்கும் சுத்தமான தெருக்களும் ஒரே மாதிரி வீடுகளும் அமைந்திருந்தன. இவர்கள் தனித்தனி வீடுகளையே விரும்புகிறார்கள். பிளாட்டுகள் அதிகம் இல்லை. ஜனத் தொகையும் குறைவு தானே!

பொதுவாக ஆஸ்திரேலியா முழுவதும் எல்லா நகரங்களும் ஒரே மாதிரி தான் இருந்தன. நம் நாட்டைப் போல் கேரளா, தமிழ்நாடு மற்றும் ஒவ்வொரு மாநிலத்தின் வித்தியாசமும் விதவிதமான நூதனங்களும் இல்லை.

100, 200 வருடக் கண்டுபிடிப்பு ஆதலால் நகரை நவீனமாக-வசதியாகத் திட்டமிட்டுக் கட்டியுள்ளனர். ஆனால் சுத்தமாகப் பராமரிப்பதைப் பாராட்டியே ஆக வேண்டும்.

“சவரன் ஹில்” என்ற தங்கச் சுரங்கத்தைக் காண சிறுவர்களுக்கு ஆவல். இப்போது சுரங்க வேலை இல்லை என்றாலும் சுரங்கத்தைப் பாதுகாத்து வருகிறார்கள்.

சுரங்கத்திற்குச் செல்லு முன்பு பழைய லண்டன் தெருவிற்குள் நுழைந்து விட்ட பிரமை. தெரு விளக்குக் கம்பங்கள், கடைகள், குதிரைகள் பூட்டிய கேரஜ், பழைய கால உடை அணிந்த மக்கள்… அக்காலத்து லண்டன் தெருவையே கண்முன் கொண்டுவந்து நிறுத்தி விட்டார்கள்.

குகைக்குள் இறங்கிக் கீழே சென்றார்கள். சுரங்கம் எப்படி இருந்ததோ, அதே போல்-எங்கெங்கு தொழிலாளிகள் எப்படி வேலை செய்தார்களோ அங்கங்கு அதற்குப் பதில் சிலைகளை வைத்து மின்சாரத்தால் அவற்றை இயக்கியதால் சுரங்கத்தில் வேலை நடப்பதைப் போன்றே இருந்தது. எத்தனை கடினமான உழைப்பாளிகள்!

"எங்காவது தங்கம் தென்பட்டால் எடுத்துக் கொள்ளலாம்!" என்றார் கைடு ரகசியமாக. "எப்போதாவது உங்களுக்குக் கிடைத்திருக்கிறதா?" என்றார்கள் சிறுவர்கள். "உஷ்! அது ரகசியம்........" என்றார் கைடு. சுரங்கத்தை விட்டு வந்தவுடன் சின்ன நீரோடை. ஆளுக்கொரு சலிப்பான்களை வைத்து நீருக்குள் முக்கி எடுத்து சலித்துக் கொண்டிருந்தனர். நீரில் சில தங்கத் துணுக்குகள் கிடைக்குமாம்.

நாமும் சலித்துப் பார்ப்போம் என்று தீவிரமாகச் சலித்தனர் எல்லாச் சிறுவர்களுமே!

ஊஹும்... கிடைத்த பாடில்லை.

எல்லோரும் மேத்தாவைச் சூழ்ந்து கொண்டார்கள். மிகச் சிறிய துணுக்கு ஒன்று அவன் சல்லடையில் அகப்பட்டிருந்தது. கைடு பார்த்து விட்டு அது தங்கம் தான் என்றார். "லக்கி பாய்!" என்று பாய்ஜி அவனைத் தட்டிக் கொடுத்தார்.

இன்னும் கூடத் தங்கம் பெலாரட் பகுதியில் கிடைக்கலாம். ஆனால் சுரங்க வேலைகளை விட்டு விட்டார்கள். நிதியும், தொழிலாளிகள் கிடைக்காமையும் தான் காரணம். இப்போது அமெரிக்க உதவியுடன் மீண்டும் பணிகளை மெல்லத் துவக்கியுள்ளனர்.

அருகில் உள்ள தங்கக் கட்டிகள் உள்ள மியூசியம் பார்த்துவிட்டு வேனில் ஏறினார்கள்.

மாலை விழா களைகட்டி இருந்தது. ஏராளமான மாணவர்களும் ஆசிரியர்களும் குழுமி இருந்தனர். பல நாட்டு மாணவர்களின் அறிமுகம் கிடைத்தது.

விசாலிடம் ஒரு வியட்நாம் மாணவன் வந்து, "க்ளாட் டு மீட் யூ விசால் ஆந்திரா!" என்றான். அவன் நண்பர்களுக்கு ஒரே

சிரிப்பு. ஆந்திரா என்பது அவன் இருப்பிடம். விசால் மட்டும் தான் பெயர் என்று விளக்கினான் விசால்.

மேயரும், பாய்ஜியும் உலக அமைதி காப்பது பற்றிப் பேசினார்கள்.

இந்தியக் குழுவில் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ள மாணவர்களை அறிமுகப்படுத்தினார் பாய்ஜி அவர்கள் வரைந்த ஓவியங்கள் பார்வைக்கு வைக்கப்பட்டன. அவர்களைப் பாராட்டி மேயர் சிறுவர்களுக்குத் தங்க மெடல்களைப் பரிசுகளாக அளித்தார்.

இது போல் மற்ற நாட்டுக் குழந்தைகளும் இந்தியா வந்து நட்பை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார் பாய்ஜி. கட்டாயம் தன் ஆசிரமம் வர வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இம்முறையும் விவேக் பாடினான். கிஷோர் நடன உடைகளுடன் குஜராத் நடனம் ஆடினான். சலீமின் மிமிக்ரி ரொம்ப நன்றாக இருந்தது.

நரேன் விவேகாநந்தர் போலப் பேசிக் காட்டினான். சந்திரகாந்த் ஒரிய நாடோடிப் பாடலைப் பாடிக் காட்டினான்.

எல்லா நாட்டு மாணவர்களும் சேர்ந்து இப்படி ஒரு GET TOGETHER –ஐ பார்த்ததே இல்லை. அற்புதம்!” என்றான் விவேக்.

“பாய்ஜிக்குத்தான் நன்றி கூற வேண்டும்!” என்றான் சியாம். விருந்திற்குப் பின் ஓய்வெடுக்கக் கிளம்பினார்கள்.

காலை பல்கலைக்கழகத்தில் விடை பெற்றுக் கொண்டு பெலாரட்டின் அருகில் உள்ள பெண்டிகோவைப் பார்வையிட்டார்கள். இரு நகரங்களும் விக்டோரியா மாநிலத்திலேயே இருந்தன.

பெண்டிகோவில் சீன மியூசியம் காண நன்றாக இருந்தது. முன்பு தங்கம் எடுக்கவே சீனர்கள் இங்கு நிறையக் குடியேறினார்களாம். அதைக் “கோல்ட் ரஷ்” என்பார்களாம். முன்பு வந்த சீனர்களும், ஜெர்மானியர்களும் இங்கேயே தங்கிவிட்டார்களாம். பெண்டிகோ மட்பாண்ட தொழிற்சாலையைப் பார்த்து விட்டு மெல்பர்ன் விமான நிலையத்திற்குக்

கிளம்பினார்கள். அங்கிருந்துதானே டாஸ்மேனியா போக வேண்டும்.

8. டாஸ்மேனியத் தீவில்

டாஸ்மேனியத் தீவில் இறங்கியதும் குளிர் காற்று வீசி அன்பைப் பொழிந்து கொண்டிருந்தது. நம் கோடைகாலத்தில் தான் ஆஸ்திரேலியாவில் குளிர்காலம் ஆரம்பிக்கிறது. இதன் தலைநகரான ஹோபர்ட் சிறு துறைமுக நகரம். மேட்டு நிலங்களும், பள்ளத்தாக்குகளும், கடற்கரையும் சேர்ந்துள்ள பிரதேசம். ஒரு சின்ன சுவிட்சர்லாந்தின் தோற்றம்.

இரவு நேரம். கட்ற்கரையை ஒட்டி வண்ண விளக்குகள் வரவேற்க மிஸஸ் ஈனாவுடன் விவேக்கும், விசாலும் வந்து கொண்டிருந்தனர். மிஸஸ் ஈனாவைப் பார்த்ததும் இருவருக்கும் தங்கள் பாட்டியின் நினைவு வந்தது. இந்த வயதில் எவ்வளவு உற்சாகமாக இருக்கிறார். ஆஸ்திரேலியச் சமாதானக் குழுவின் தலைவியாம் இவர். ஐ.நா சபையில் செர்வாஸுக்கு என்று ஒரு இடம் உள்ளதாம். அதில் கலந்து பேச விரும்புகிறாராம் ஈனா.

வீட்டில் இறங்கியதும் அவர்கள் அறையில் பூனை ஒன்று படுத்திருந்தது. "கமான்,பேபி! விருந்தாளிகள் வந்து விட்டார்கள், பார், நீ ஹாலில் வந்து தூங்கு!" ஈனாவின் கட்டளைக்கு பணிந்தாலும் திரும்பத் திரும்ப ரூமையே சுற்றி வந்தது பூனை.

அதன் இடம் பறி போகிறதென்று ஒரே கவலை.

ஈனாவும் சேர்ந்து கவலைப்பட்டார். பெரும்பாலான வீடுகளில் பூனைகளைச் செல்லமாக வளர்த்தார்கள். நாயும் இருந்தது. வீட்டு உறுப்பினர் மாதிரி அதோடு அடிக்கடி பேசிக் கொள்கிறார்கள்.

ஈனாவை ரொம்பப்பிடித்தது, இவர்களுக்கு. தன் குழந்தைகளைப் போல கவனித்துக் கொண்டார். 'போர்ட் ஆதர்' போய்த் திரும்ப ரொம்ப நேரம் ஆகும். வெளியில் சாப்பிட்டால் மிகவும் செலவு என்று லஞ்ச் பேக் பண்ணித் தந்தார்.

போர்ட் ஆதருக்கு ஹோபர்ட் கோச்சில் பயணம் ஆனார்கள். கடலை ஒட்டியிருந்த அந்தப் பழங்காலச் சிறைச்சாலையைப் பார்க்கத்தான் சென்று கொண்டு இருந்தார்கள்.

‘இந்தியர்களா? உங்கள் இரண்டாயிர, மூவாயிர ஆண்டுச் சரித்திரத்திற்கு முன் எங்கள் சரித்திரம் ஒன்றும் பெரியதாக இல்லை!’ என்று கூச்சப்பட்டார் கைடு.

முன்பு ஆங்கிலேயர் காலத்தில் கைதிகளை இங்கு அனுப்பி விடுவார்களாம். இந்தியக் கைதிகளும் இருந்திருக்கலாம். ஜெயில், அதன் பக்கம் சின்னதான ஒரு கோர்ட். பக்கத்துக் கட்டடத்தில் சரித்திரப் படம் ஒன்றைக் காண்பித்தார்கள்.

அந்த இடமே கடலை ஒட்டிப் பச்சைப் பசேல் என்று புல்வெளி படர்ந்து சுத்தமாக இருந்தது.

ஜெயிலைக் கூட எத்தனை சுத்தமாக வைத்துள்ளார்கள்!

“அந்தச் சுத்தம் சுகம் தருகிறது இவர்களுக்கு!” சியாமும் விவேக்கும் பேசியபடி லஞ்ச்சை சாப்பிட்டனர்.

“அந்தப் படகுதான் கைடு குறிப்பிட்ட தீவிற்குப் போகிறதா?” விவேக் கேட்டான்.

“இருக்கலாம். இறந்த கைதிகளை இங்கே புதைத்ததால் ‘ஐலண்ட் ஆஃப் தி டெட்’ என்கிறார்களாம்!” என்றான் சியாம். துடைத்த டவலைக் கீழே போடப் போனான் சியாம்.

“நோ...நோ!” என்று டஸ்ட் பின்னைக் காட்டினான் விவேக்.

“ஸாரி! இங்குதான் 10 அடிக்கு ஒரு டஸ்ட் பின் வைத்துப் பாதுகாத்து வருகிறார்களே! நமக்குத்தான் மறந்து விடுகிறது.” வருத்தப்பட்டுக் கொண்டான் சியாம்.

“கடல் பார்த்தாயா? எத்தனை நீல நிறமாக உள்ளது. ஆகாயமும் தான்!”

‘அழுக்கற்ற சுற்றுப்புறச் சூழல்தான் காரணம்.‘

“டெவில்ஸ் கிட்சன்!” என்றார் கைடு.

“எங்கே? எங்கே?” என்று பயத்துடன் கேட்டனர். கடலோரப் பாறைகளுக்குத்தான் அதன் அமைப்பை வைத்து அந்தப் பெயர். சிரிப்பாக இருந்தது. இன்னொன்று ‘டாஸ்மேனியன் ஆர்ச்.’ இது வளைந்து காணப்பட்டது.

கடலோரப் பாறைகளில் ஏறி ரசித்தார்கள். பசிபிக் சமுத்திரம் பரந்து விரிந்து இதமான காற்றை வீசிக் கொண்டிருந்தது.

“எந்தக் கோடியில் இருக்கிறோம் பார், சியாம்! இன்னும் சற்றுப் போய்விட்டால் அண்டார்டிகாவைத் தொட்டு விடுவோம்!” என்றான் விவேக்.

“நம்பவே முடியவில்லை!” சிலிர்த்துக் கொண்டான் சியாம்.

மாலை ஈனாவுடன் பொட்டானிகல் கார்டன் போனார்கள். இப்படியும் ஒரு அழகா? வண்ண வண்ணப்பூக்கள், விதம் விதமான மரங்கள், செடிகள். ஒவ்வொரு செடியின் அடியிலும் அதைப்பற்றிய விளக்கம். ரோஜாக்களுக்கு என்று தனியான க்ளாஸ் ஹவுஸ். பெரிய பெரிய பல வண்ண ரோஜாக்கள் கண்ணைக் கவர்ந்தன. கற்றாழைகளில் தான் எத்தனை வகை!

பல நாட்டு ரகத்தில் தோட்டங்கள். ஜப்பானியத் தோட்டம் அந்நாட்டுக்கலை நுணுக்கத்துடன் கட்டப்பட்டிருந்தது. சலசலக்கும் அருவி. அதன் மேல் பாலம். பார்க்க ரம்யமான காட்சி. ஜப்பானிய நடிகர் ஒருவருக்கு இங்கு வைத்துத் திருமணம் நடந்ததாம். அதிலிருந்து இத்தோட்டம் பிரபலம் அடைந்து விட்டதாம்.

“இதோ பார்த்தாயா, விவேக், உடல் ஊனமுற்றவர்களுக்கென்று தனித் தோட்டம்.”

“ஆமாம். நடக்க முடியாமல் தவிப்பவர்கள் சக்கர நாற்காலிகளில் இங்கு வந்து இளைப்பாறுவார்கள்,” என்றார் ஈனா. அவர்கள் உபயோகத்திற்குத் தனியான டாய்லெட்டுகளையும் மறக்க வில்லை.

நாம் என்றால், பாவம் என்று பரிதாபப்பட்டு விட்டு சும்மா இருந்து விடுவோம். இவர்கள் உடல் ஊனத்தையும் மறந்து அவர்கள் உற்சாகமாக இருக்க உதவி செய்கிறார்கள்.

காலை எழுந்ததும் கண்ணாடி ஜன்னல் வழியாகப் பார்த்ததும் ஈனாவின் வீட்டின் பின் உள்ள மவுண்ட் வெலிங்டன் பனி மூடிக் காட்சியளித்தது. வீடு ஹார்பரின் அருகில் இருந்ததால் பலதரப்பட்ட படகுகள் மிதந்து கொண்டிருந்தன.

ஈனாவிற்குச் சமையலில் கூட ஹெல்ப் பண்ணினார்கள். தான் பனிப் படலத்தைக் கண்டதைக் கூறினான் விவேக். சூரிய ஒளி பட்டு அது மெள்ள உருகி இருந்தது இப்போது.

"கட்டாயம் இந்தியா வர வேண்டும், ஆன்ட்டி!" என்றான் சியாம்.

"வர ஆசைதான். ஆனால் அங்கு பிச்சைக்காரர்கள் பற்றிக் கேள்விப்பட்டுள்ளேன். அதைக் கண்டால் சகிக்க முடியாது!" என்றார்.

"வாழ்வில் ஏற்ற இறக்கங்கள் இருக்கத்தான் செய்யும். நம்மால் ஆன உதவிகளைச் செய்யலாம். வேறு என்ன செய்ய முடியும்? உங்கள் நாட்டில் கூலி வர்க்கம் கிடையாது. வறுமையும் இல்லை. ஜனத் தொகை பெருக்கமும் நிதி இல்லாமையும் தான் இதற்குக் காரணம். எல்லாவற்றையும் சகிக்க வேண்டும் ஆன்ட்டி!" என்று விவேக் கூறியதும், அவனின் பெரிய மனிதத் தோரணையை மெச்சினார் ஈனா.

மதியம் குகைப் பகுதிக்குச் சென்றார்கள். 'ஸ்டாலிஸ்டைட் ஸ்டலகமைட்' எனும் பனிக்கட்டிகள் பெரிய பெரிய குச்சிகளாய்க் கீழிருந்து மேலும், மேலிருந்து கீழுமாய் நீட்டிக் கொண்டிருந்தன. அற்புதக் காட்சி. தங்கள் பாடத்தில் படித்தது நினைவிற்கு வந்தது சியாமிற்கும், விவேக்கிற்கும்.

ஈனாவின் கார் பிக்னிக் ஸ்பாட்டில் நுழைந்த்து. அழகான புல்தரை, செடி, கொடிகள் அடர்ந்த இடம். ஆங்காங்கே அமர்ந்து சாப்பிட மேஜைகள். தேவைப்பட்டால் சமைத்துச் சாப்பிட 'பார்பிக் யூ' அடுப்புகள். ஆஸ்திரேலியா முழுவதும் இது போல நிறைய இருந்தது.

ஈனா ஆசையோடு பரிமாறினார். பூசணி சூப், ஆஸ்திரேலியன் டிலைட் என்று ரொம்பப் பிடித்தது, விவேக்கிற்கு. டாஸ்மேனியன் ஆப்பிள் மிகவும் ருசித்தது.

லேசாகத் தூற ஆரம்பித்ததும் அங்குள்ள செட்டிற்குள் நுழைந்தார்கள். அங்கும் அமர்ந்து சாப்பிட வசதி. எதையும் யோசித்து வைத்துச் செய்வார்களோ?

ஆஸ்திரேலியர்கள் இயல்பாக இருக்க விரும்புகிறார்கள். அநாவசியமான கவலைகள் பிடிப்பதில்லை. கிடைத்தவற்றை நன்கு

அனுபவிக்கிறார்கள். உடைகள் விசயத்திலும் ரொம்ப தோரணைகள் இல்லை.

சிறுவர்கள் தந்த அன்பளிப்பை அன்போடு ஏற்றார் ஈனா. எப்போதும் சிரிப்பூட்டிய வண்ணம் இருக்கும் அவரை எப்படி மறக்க முடியும்? ‘வெல்கம் எ கெஸ்ட், சென்ட் பேக் எ ஃப்ரெண்ட்’ என்னும் வார்த்தைகள் ஞாபகத்திற்கு வந்தன. விவேக், சியாம் வரைந்த ஓவியங்களைப் பாராட்டினார் ஈனா. தன்னிடம் வந்த சில ஓவியப் பொருள்களை அன்பளிப்பாகத் தந்தார்.

சிட்னி ஏர்போர்ட்டில் தங்கள் ஹோஸ்டுகளுக்காகக் காத்திருந்தனர் அனைவரும். விமானம் சற்று முன்னதாகவே வந்து விட்டதால் இன்னும் யாரும் வந்திருக்க வில்லை.

விவேக் சிட்னியில் இருக்கும் தன் அப்பாவின் நண்பர் திரு.கீர்த்திக்கு போன் பண்ணினான். அன்பாகப் பேசினார் திரு. கீர்த்தி. கட்டாயம் மறுநாள் தன் வீட்டில் வந்து இருக்கும்படி கேட்டுக் கொண்டார். சியாமையும் அழைத்து வரச் சொன்னார்.

போனை வைத்து விட்டு பாய்ஜியிடம் அனுமதி கேட்டான். அவரும் போக அனுமதித்து விட்டார். யார் யார் எங்கு யாருடன் தங்கியுள்ளார்கள் என்று பாய்ஜிக்குத் தெரியும். அடிக்கடி அந்த இடங்களுக்கு போன் பண்ணி அவர்களைப் பற்றி அறிந்து கொள்வார். அந்தந்த ஊர் ‘செர்வாஸ்’ தலைவருக்கும் இதில் பெரும் பொறுப்பு இருக்கும்.

சிட்னியின் செர்வாஸ் கழகத் தலைவி திருமதி கெருடா புன்சிரிப்புடன் இறங்கினார். அவருடன் ஒரு நெதர்லாந்துத் தம்பதியும், சச்சி எனும் ஜப்பானிய மாணவியும் இறங்கினார்கள்.

நெதர்லாந்துத் தம்பதி தம் விருந்தாளிகள் என்றும் சச்சி தன்னுடன் தங்கி ஆஸ்திரேலியாவைப் பற்றித் தெரிந்து கொள்ள வந்துள்ளதாகவும் கூறினார்.

ஜப்பானிய பாணியில் வணக்கம் தெரிவித்து விட்டு மிக அன்புடன் பேசினார் சச்சி. ஆங்கிலம் அதிகம் தெரியவில்லை அவளுக்கு. ஆனால் மிக நல்ல பெண்.

மிஸஸ் ஜூடி வந்ததும் அவருடன் கிளம்பினார்கள் சிறுவர்கள் இருவரும். வீட்டில் அவர் கணவரும், குழந்தைகள் வில்லியமும், ஜெஸிக்காவும் இவர்களுக்காகக் காத்திருந்தனர்.

அன்று ஞாயிற்றுக் கிழமை. அன்றுதான் அவர்களுக்கு ஓய்வு கிடைக்குமாம். எல்லோரும் சேர்ந்து அவர்கள் வீட்டின் அருகில் உள்ள ‘பிராண்டே’ பீச்சிற்குப் போனார்கள்.

கடற்கரை முழுவதும் மக்கள் கூட்டம் நிரம்பி வழிந்தது. எல்லோருமே நீச்சல் உடையில் கடற்கரையில் படுத்து

ஓய்வெடுத்தும், நீந்திக் கொண்டும் இருந்தார்கள். இத்தனைக்கூட்டத்திலும் சிறு குப்பையோ, அழுக்கோ இல்லை. சியாமும் விவேக்கும் ஆனந்தத்துடன் நீந்தினார்கள்.

நம் மெரீனா பீச் எவ்வளவு பெரியது! அதையும் இப்படி வைத்திருந்தால் எத்தனை நன்றாக இருக்கும் என்று விவேக் நினைத்துக் கொண்டான்.

மாலை வில்லியம் தான் வெளியில் அழைத்துப் போனான். பெற்றோர் மிக பிஸியாக இருந்தனர். பார்ட்டிக்குச் சென்று விட்டார்கள். பொன்னான ஞாயிறுகளை இழக்க விரும்புவதில்லையாம். இவர்களும் அவர்களைத் தொந்தரவு படுத்த விரும்ப வில்லை. பாய்ஜியின் அறிவுரைகள் ஞாபகத்திற்கு வந்தன.

பஸ்ஸில் பயணம் செய்தனர். விண்ணை முட்டும் மிகப் பெரிய கட்டடங்கள் சாலைகளை அடைத்து இருட்டாக காண்பித்தன. ஆஸ்திரேலியாவிலேயே இங்குதான் இவ்வளவு பெரிய கட்டடங்ளைக் கண்டார்கள். மக்களும் இங்குதான் நெரிசலாக இருந்தார்கள். பெரிய கட்டடங்களும், நெருங்கிய ரோடுகளில் உள்ள விதவிதமான அலுவலகங்களும் பிரமிக்க வைத்தன.

புகழ் பெற்ற ‘பாண்டே பீச்’சைப் பார்த்து விட்டு “மெட்ரோ” எனும் பாதாள ரயில் மூலம் பயணம் செய்தார்கள். எங்கு பார்த்தாலும் மிகப் பெரிய எஸ்கலேட்டர்கள். சிட்னி கொஞ்சம் திகைக்கத் தான் வைத்து விட்டது. தனியாக வந்தால் வழி தெரியாமல் தப்பிப் போவோம் என்று பயந்து கொண்டார்கள் இந்திய நண்பர்கள்.

மெட்ரோ ரயில் அந்தந்த ஸ்டேஷன் வந்ததும் தானாகக் கதவுகளைத் திறந்து கொள்கிறது. பயணிகள் வேகமாக ஏறிக்கொள்ள, தானாகக் கதவுகளை மூடிக்கொண்டு கிளம்பி விடுகிறது.

பிரயாணிகள் தான் உண்டு, தன் வேலை உண்டு என்று இருந்தார்கள். யாரும் அதிகம் பேசிக்கொள்ளவில்லை.

ரயிலில் இறங்கி ‘பேடி மார்க்கெட்’ வந்தனர். அங்குதான் சாமான்கள் குறைந்த விலைக்குக் கிடைக்குமாம். விவேக்கிற்கு மூர் மார்க்கெட் ஞாபகம் வர, சியாமிற்கு டில்லி ‘சாந்தினி சௌக்’ நினைவிற்கு வந்தது.

‘மதர்ஸ் டே ஸ்பெஷல்’ என்று பெயர் ஒட்டிப் பரிசுப் பொருட்களை விற்பனை செய்து கொண்டிருந்தார்கள். விசாரித்தபோது வருடத்தில் ஒரு நாள் ‘மதர்ஸ் டே’ வருமாம். அப்பொழுது போய்ப் பரிசுகள் தந்து அம்மாவைப் பார்த்து விட்டு வருவார்களாம்.

“உங்கள் நாட்டில் எப்படி?” என்றான் வில்லியம். “நாங்கள் எப்போதும் அம்மா அப்பாவுடன் தான் இருப்போம். எல்லா நாட்களும் எங்களுக்கு மதர்ஸ் டேதான்!” என்றான் விவேக்.

“நீயும் உன் அம்மாவை விட்டுவிட்டுப் போய் விடுவாயா வில்லியம்?” என்றான் விவேக் கவலையுடன். “நான் இப்போது பத்தாவதுதான் படிக்கிறேன். சில வேளை பிரிந்து போகலாம். பெரிய இன்ஜினீயர் ஆக விரும்புகிறேன். யுனிவர்சிட்டியில் இடம் கிடைப்பதே அரிது. பெரும்பாலானவர்கள் பள்ளிப் படிப்பு முடிந்ததும் வேறு வேலகளுக்கும் சென்று விடுவார்கள்.”

“யூ நோ, இங்கு பெற்றோர் கூட குறிப்பிட்ட வயதானதும் தங்கள் பிள்ளைகள் தனியே செல்வதை விரும்புகிறார்கள்.” வில்லியம் சொல்வதைக் கேட்கவே கஷ்டமாக இருந்தது இருவருக்கும்.

சிட்னி ஹார்பர் பிளேஸ் வந்த்தும் அதெல்லாம் மறந்து விட்டது அங்கிருந்து ‘மான்லே’ பீச் செல்ல மிகப் பெரிய ஃபெர்ரியில் ஏறினர். யாரும் முண்டியடித்து ஏறவில்லை. அமைதியாகப் பிறருக்கு வழி விட்டே ஏறினர். விவேக் அர்த்தத்துடன் பார்க்க சியாம் புன்னகைத்தான்.

மான்லே பீச் உல்லாசத்துடன் இருப்பதற்கென்றே உருவாக்கப்பட்ட மாயா ஜால உலகம். அதை நோக்கித்தான் டபுள் டெக்கர் ஃபெர்ரியில் போய்க் கொண்டிருந்தனர் குழந்தைகள். சிறிய தியேட்டரே நீரில் போவது போன்ற பிரமை. அத்தனை வசதி. நடுவில் ஃபெர்ரி போய்க் கொண்டிருக்க, கரையின் இரு மருங்கிலும் கும்பலாக உயரமான அப்பார்ட்மெண்டுகள், பல வேறு கட்டடங்கள்.

இடையிடையே சிறிய படகுகளும் வந்து போயின. இருட்ட ஆரம்பித்ததால் கட்டட விளக்குகள் வைரங்களாய் மின்னின. புகழ் பெற்ற ‘ஒபேரா‘ தியேட்டரையும் கடந்து போனார்கள்.

பீச்சில் இறங்கும் போது முதலில் அனுமதிக்கப்பட்டது மனநிலை சரியில்லாத சிறுவர்கள்தான். வெறித்தபடி மூளை வளர்ச்சி குன்றிய சிறுவர்களைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

யாரும் அவர்களைச் சுற்றிக் கூட்டம் போடவோ, கேலி பேசவோ இல்லை. அவர்களும் கொஞ்சம் மாறுதலை அனுபவிக்கட்டுமே என்று அவர்களின் உறவினர்கள் அன்போடு சக்கர நாற்காலிகளில் தள்ளி வந்தனர்.

இதை மனமாரப் பாராட்டினார்கள் சியாமும், விவேக்கும். பீச்சிற்குள் நுழைந்து விட்டால் திரும்பவே மனம் வராது. அவ்வளவு பொழுது போக்கு அம்சங்கள். எலக்ட்ரானிக்ஸில் இயங்கும் விளையாட்டுக் கூடம் ஒன்றே போதுமே. திருப்தி உண்டாகும் வரை விளையாடினார்கள். எங்கு திரும்பினாலும் கண் கவர் கடைகள், ஐஸ்கிரீம் பார்லர்கள், புத்தக நிலையங்கள் இன்னும் எத்தனையோ.

நேரம் ஆகி விட்டதை உணர்ந்து வேகமாகக் கிளம்பி விட்டனர்.

மறுநாள் மிஸஸ் ஜூடியிடம் விடை பெற்றுக் கொண்டு திரு. கீர்த்திவாசன் வீட்டிற்குச் சென்றார்கள். அவர் விஞ்ஞானியாக இருக்கிறார். முன்பு காரைக்குடியில் இருந்தவர்.

அவர் மனைவி உமா இவர்களுக்காக வற்றல் குழம்பு, அவியல், அப்பளம், பாயஸம் என்று தமிழ் நாட்டுச் சமையலைச் செய்திருந்தார். எல்லாச் சமையல் சாமான்களுமே அங்கு கிடைக்கிறதாம். சாப்பாடு சுவையாக இருந்தது. வீட்டின் ஞாபகமும் வந்தது. திருமதி உமாவும் வேலை பார்க்கிறார். அவர் மகள் பவித்ரா படித்துக் கொண்டிருக்கிறாள்.

அவர் பேசும் ஆங்கிலம் ஆஸ்திரேலியா உச்சரிப்பை வெளிப்படுத்தியது. ஆனாலும் தமிழ்ப் பண்பாட்டை மறக்க வில்லை.

“எப்படி இருந்தாலும் இந்தியப் பண்பாட்டிற்கு ஈடாக முடியாது, ஆனால் மற்ற நாடுகளுடன் ஒப்பிடுகையில் ஆஸ்திரேலியர்கள் அமைதியானவர்கள். கலகலப்பாக இருப்பவர்கள்!” என்றார் கீர்த்தி. ஆமாம் இவர்கள் இதுவரை கலாட்டா செய்பவர்களையோ, கேடிக் கும்பலையோ பார்க்க வில்லை.

இவர்களுக்காக அன்று விடுமுறை எடுத்துக் கொண்டு ‘சிட்னி எக்ஸ்ப்ளோரா’’ எனும் கோச்சில் சிட்னியின் முக்கிய இடங்களான ‘ஒபேராஹவுஸ்’, ‘சென்டர் பாயிண்ட்’, ‘ஹார்பர் பிரிட்ஜ்’, மியூசியம் எல்லாம் போய்ப் பார்த்துவிட்டு வந்தனர்.

ஒபேரா ஹவுஸ் கடற்கரையில் ஒரு பூவிதழ் போன்று அழகாகக் காட்சி அளித்தது. மிகுந்த பொருள் செலவில் கட்டப்பட்டுள்ளது. கட்டுவதற்கே 20 வருடங்கள் ஆனதாம். ராணி இரண்டாம் எலிசபெத் திறந்து வைத்தாராம் இதை.

மியூசிக் ஹால், ஒபேரா ஹால், டான்ஸ் ஹால் என்று தனித்தனி அரங்குகள். பார்ட்டிகள் திருமணங்கள் நடத்தக்கூடத் தனி ஹால்கள்.

சென்டர் பாயின்ட் எனும் உயரமான கட்டட உச்சியில் இருந்து பார்த்து சிட்னியின் அழகான அமைப்பை ரசித்தார்கள் சிறுவர்கள்.

ஆஸ்திரேலிய நகரங்களிலேயே சிட்னிதான் பழைமையானதாம். இங்கு தான் ஜனத்தொகையும் அதிகமாம். பொதுவாகத் தனித் தனி வீடுகளில் வசிக்க விரும்பும் ஆஸ்திரேலியர்கள் இங்கு அடுக்கு மாடிகளில் வாழ்ந்தாக வேண்டிய சூழ்நிலை. பல நாட்டு மக்கள் இங்கு வசிக்கின்றனர். இந்தியர்களும் இங்கு அதிகம்.

மிஸ்டர் கீர்த்திவாசன் ஆஸ்திரேலியப் பிரஜை ஆகிவிட்டார். சம்பளத்திற்கு ஏற்ப வேலை செய்தாக வேண்டுமாம். ‘காஸ்ட் ஆஃப் லிவிங் அதிகம்!’ என்றார். திரு.கீர்த்தி, திருமதி.உமாவும், நம் “ஊர் சென்றால், சுத்தம் பற்றியும் டாய்லெட் வசதி பற்றியும் மறக்காமல் எடுத்துச் சொல்லுங்கள். மாணவர்களாகிய நீங்கள் முயற்சி எடுத்துக் கொண்டாலே போதும்!” என்றார்.

அவரின் வேண்டுகோளை ஏற்று, உபசரிப்பிற்கு நன்றி சொல்லிவிட்டு, ஆஸ்திரேலியத் தலைநகரான கேன்பராவிற்குப் புறப்பட்டனர்.

10. கண்கவர் கேன்பரா

கேன்பரா தலைநகருக்கு உரிய பொலிவுடன் அதற்கென்றே கொண்ட அலுவலகங்ளை மட்டுமே தன்னுள் அடக்கிய சிறிய நகரமாகத்தான் இருந்தது. குளிர்தான் கடுமையாக இருந்தது.

பார்லிமெண்ட் அழகாக, வித்யாசமாக பெரிய தோற்றத்துடன் இருந்தது.

உள்ளே நுழைந்ததும் நம் நாட்டை ஒத்து பிரிட்டிஷ் அரசியல் அமைப்பைக் கொண்டு மேல்சபை, கீழ்சபை என்று டில்லி பார்லிமெண்ட்டைப் போன்றே அமைக்கப்பட்டிருந்தது. சிறுவர்கள் பல கேள்விகள் கேட்டார்கள்.

கேன்பரா இயற்கைப் பொலிவுடன் காணப்பட்டது. மரங்கள் அடர்ந்து புற் கம்பளங்கள் விரித்து இயற்கையின் தர்பாராகக் காட்சி அளித்தது. இங்குள்ள மரங்களுக்கு ஒரு விசேஷம், அந்தந்தப் பருவங்களில் நிறத்தை மாற்றிக் கொள்ளுமாம்.

கேன்பராவில் ஒவ்வொரு தூதரகமாகப் பார்த்துக் கொண்டு வந்தார்கள்.

இதோ சீனா எம்பஸி... இது இத்தாலியினுடையது... என்று உற்சாகத்துடன் பார்த்த சிறுவர்கள், இந்திய எம்பஸியை ஆவலுடன் எதிர்பார்த்தனர். ஒவ்வொரு தூதரகமும் அந்தந்த நாட்டுக் கலை அம்சத்துடன் கட்டப்பட்டிருந்தது.

“இதோ இந்தியத் தூதரகம்!” பிரபாவதி சுட்டிக் காட்டினார். மஹாலைப் போன்று காட்சி அளித்த நம்நாட்டுத் தூதரகத்தைப் பெருமை பொங்கப் பார்த்துவிட்டு உள்ளே நுழைந்தனர். இந்திய ஹை கமிஷனர் இவர்கள் வருகையில் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். பாய்ஜியைப் பாராட்டிப் பேசினார். அனைவருக்கும் தேநீர் தந்து உபசரித்தார்.

இதுபோல மாணவர்கள் நம் அருகில் உள்ள நாடுகளுக்கும் விஜயம் செய்து நம் உறவைப் பலப்படுத்திக் கொள்ள வேண்டும். அரசியல் குழப்பங்களால் ஏற்படும் தடைகளை இளைய தலைமுறையினர் உணர்ந்து உலக சமாதானத்திற்குப் பாடுபட வேண்டும் என்றார்.

“நிச்சயம் செய்வோம்!” என்றனர் ஒருமித்த குரலில். இதன் பின் ஹை கோர்ட், வார் மெமோரியல் ஆகிய இடங்களைப் பார்த்து விட்டுத் தங்கள் ஹோஸ்டுகளுடன் இரவு ஓய்வெடுக்கப் புறப்பட்டனர்.

இம்முறை இவர்கள் தங்கிய இடம் பண்ணை வீடாக அமைந்து விட்டது. நிறைய ஆடுகள் அடர்த்தியான ரோமங்களுடன் மேய்ந்து கொண்டிருந்தன.

மிஸஸ்டேனியலும், மைக்கேலும் எல்லாம் சுற்றிக் காண்பித்தனர். ஆடுகளின் ரோமங்களை எப்படி வெட்டி எடுப்பது என்றும், பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு அனுப்புவது பற்றியும் விவரித்தனர். ஆடைகள் எல்லாம் வெளிநாடுகளில் இருந்துதான் நெய்து வருகிறதாம்.

அதற்கு மேல் இருவருக்கும் மாலை நேரக் குளிரைத் தாங்க முடியவில்லை. நடுங்கவே ஆரம்பித்து விட்டனர். -1 டிகிரி குளிராம். மிஸஸ் டேனி வேகமாகச் சென்று எலெக்டிரிக் பெட்டில் இருவரையும் படுக்க வைத்தார். அதன் உஷ்ணம் பட்டு கதகதப்பானதும் சற்று சுதாரித்துக் கொண்டார்கள்.

“வா விவேக்... சிம்னி அருகில் பேசிக் கொண்டிருக்கலாம்” கூப்பிட்டான் சியாம்...

“ஊஹும் என்னால் முடியாது. சியாம்... ப்ளீஸ்...” மறுத்தான் விவேக் இரு ஸ்வெட்டர்களின் மேலே பிளாங்கெட்டை மூடியபடி. சியாம் டில்லியில் இருந்து குளிரைப் பழகிவிட்டான். விவேக்கிற்கு ஒத்து வரவில்லை.

“ஹலோ, எப்படி இருக்கிறது இப்போது?” என்று கேட்டபடி உணவுகளை அங்கேயே கொண்டு வந்து விட்டாள் டேனியின் ஒரே பெண்ணான வெனிஸா. அவளும் மாணவிதான்.

மெக்ஸிகோவில் முன்பு தங்கியிருந்ததாகச் சொன்னாள். அவர்களின் பழக்க வழக்கமும் ஏறக் குறைய இந்தியாவைப் போன்றே இருக்குமாம். அதனால் இவர்களின் ஊறுகாய், காக்ரா எல்லாவற்றையும் அவர்களும் ருசித்துச் சாப்பிட்டனர்.

ஐரிஷ்காரரான மைக்கேல் கிதாரில் ஐரிஷ் பாடல்களை வாசித்தார். சற்றுப் பருமனான டேனி டான்ஸ் ஆடியதும் சிரிப்பே வந்து விட்டது. தன் மகள் வெனிஸாவை மிகவும் புகழ்ந்தார். “இது

மாதிரி பெண் கிடைப்பது அரிது. நாங்கள் சொல்வதை எல்லாம் மதித்து ஏற்றுக் கொள்வாள். இந்த வயதில் பெற்றோருடன் சேர்ந்திருப்பதைச் சில இடங்களில்தான் பார்க்க முடியும்!” என்று பெருமிதப்பட்டார் மிஸஸ் டேனி. இரவு கங்காருகள் கூட்டம் கூட்டமாகப் புற்களில் மேயுமாம். பார்க்க அழைத்தார் மைக்கேல். விவேக் தயங்கினான். கூடவே ஆசையும் இருந்தது.

தோலினால் ஆன தலை வரை மூடும் ‘ஃபர்’ எனும் பெரிய கோட்டுகளை இருவருக்கும் தந்தாள் வெனிஸா.

“பார்க்க எஸ்கிமோக்கள் மாதிரி இருக்கிறீர்கள் இதை அணிந்தவுடன்!” மைக்கேல் ஜோக் அடித்தார்.

ஜீப்பில் ஏறப்போகும் போது பார்த்தனர். அட இது நம் மாருதி ஜிப்ஸி.

சந்தோஷத்துடன் புறப்பட்டனர். கொஞ்ச தூரம் சென்றனர். கும்பல் கும்பலாகக் கங்காருகள் மேய்ந்து கொண்டும் தாவி ஓடியபடியும் இருந்தன. இவற்றில் பலவகை இருக்கிறதாம்.

மறுநாள் காலை ‘கிரே ஹவுண்ட்’ பஸ்டாப்பில் மிஸஸ் டேனியும் வெனிஸாவும் இவர்களை இறக்கி விட்டனர். அங்கிருந்து தொடங்கியது பிரிஸ்பன் பயணம்.

11. பிரிஸ்பனில் பிரியா விடை

பிரிஸ்பன் கோச்சில் ஏறி நீண்ட பயணத்தைத் தொடங்கினார்கள். ஒரு நாள் முழுவதும் மேற்கொள்ள வேண்டிய பயணம்.

எப்போதும் விமானத்திலேயே பயணம் செய்தவர்களுக்கு இது ஒரு மாறுதல். வெளி நாட்டு விமானம் Quantaz என்றால் உள் நாட்டு விமானமாக Ansettடும் Australian Air Linesஸும் செயல் பட்டன. பெரும்பாலும் 'Ansett'டில் தான் பயணம் செய்தார்கள்.

நாளை anzee 'ஆன்செக் தினம்' (ஆஸ்திரேலியாவின் சுதந்திர நாள்) ஆதலால் விடுமுறை தினப் பயணம் அமைதியாகவே இருக்கும் என்று எதிர் பார்த்தனர்.

கோச்சில் பயணம் செய்வது கஷ்டமாகவே இல்லை. விமானத்தில் இருப்பதைப் போன்றே இருந்தது. அலுங்கலோ குலுங்கலோ இல்லை. ஒரு முறை கூட வண்டிகள் பழுதாகிப் பார்க்கவே இல்லை. இங்கு பெட்ரோல் தாராளம் பெரும்பாலும் மக்கள் கார்களில் தான் பயணம் செய்தார்கள்.

டிரைவர்கள் கூட உம் என்றே இருக்கவில்லை. லக்கேஜ்களைக் கூட அவர் ஒருவராகத்தான் உள்ளே வைத்தார். கூட இவர்கள் உதவி செய்தனர். எப்போதும் தமாஷ்தான். ஏதாவது ஓர் இடம் பார்க்க வேண்டும் என்றால் இப்படிப்பட்ட டிரைவர்களும், கைடுகளும் இருந்து விட்டால் போதுமே. பெரும்பாலும் டிரைவர்கள் கூட கைடாகி விடுகிறார்கள். அவர்கள் வர்ணிக்கும் விதமே இந்த இடங்களை உற்சாகத்துடன் பார்க்க வைக்கிறது. நிறைய வெளி நாட்டவர்களையும் கவர முடிகிறது.

டிரைவரிடம் மெல்லப் பேச்சுக் கொடுத்தனர். "மிஸ்டர் சிம்லர், உங்களால் எப்படி எப்போதும் ஜாலியாக இருக்க முடிகிறது? கஷ்டங்களே இல்லையா?" மெதுவாகக் கேட்டான் நரேன்.

"மை டியர் பாய்! எவ்வளவு நேரம் என்னை நோட்டம் விட்டாய்? நானும் நடுத்தர வகுப்பினன் தான். பற்றாக்குறை, மனைவிக்கு நோய் என்று எல்லாக் கவலைகளும் உண்டு.

ஆனால் வேலை என்று வந்துவிட்டால் எல்லாவற்றையும் மறந்து விட வேண்டும். இப்போது உங்களை உற்சாகமாக வைப்பதுதானே என் கடமை? எப்போதும் கவலைப்படுவதால் மட்டுமே என்ன பிரயோஜனம்? பிறருக்கு நல்ல விதமாகப் பயன்பட வேண்டாமா?" இதைக் கேட்டு சிம்லரை ரொம்பப் பிடித்துப் போனது அனைவருக்கும்.

வழியில் கொஞ்ச நேரம் டீ அருந்த பெட்ரோல் பங்க்கில் வண்டியை நிறுத்தினார். "இன்னும் கொஞ்ச நேரத்தில் பெரிய முத்துச் சிப்பியைப் பார்க்கப் போகிறீர்கள்!" என்று கூறிக் கொண்டே வந்தார். அது இது தானா? பெட்ரோல் பங்க்கின் முன் மிகப் பெரிய முத்துச் சிப்பி வடிவை அமைத்து இருந்தார்கள். இதைப் போலப் பெரிய 'லாப்ஸ்டர்', 'ஆடு', என பல வடிவங்கள் போகும் வழியில் இருந்தன.

ஒவ்வொரு பெட்ரோல் பங்க் அருகிலும் சின்ன ரெஸ்ட்டாரன்ட், ஷாப்பிங் சென்டர், டாய்லெட் கட்டாயம் இருந்தாக வேண்டுமாம். பிரயாணிகளுக்கு எவ்வளவு வசதி. கொஞ்ச நேரம் அனைவரும் பாடிக் கொண்டும் பாய்ஜியிடம் பேசியபடியும், தங்கள் அனுபவத்தை மற்றவர்களுக்குச் சொல்லியும், வீடியோவில் படம் பார்த்தும் நேரத்தைக் கடத்தினர். நள்ளிரவானதும் தூங்க ஆரம்பித்து விட்டனர்.

இதுவரை மேற்கு ஆஸ்திரேலியாவின் தலைநகரான பெர்த், தெற்கு ஆஸ்திரேலியாவின் தலைநகரான அடிலெய்டு, விக்டோரியாவின் தலைநகரான மெல்பர்ன், கூடவே பெலாரட் பெண்டிகோ, டாஸ்மேனியாவின் ஹோபர்ட், நியூ சவுத் வேல்சின் சிட்னி பார்த்தாயிற்று. இனிப் போவது குவின்ஸ்லாந்து மாநிலத்தின் தலைநகரான பிரிஸ்பனிற்கு.

காணாதது வடக்கு மாநிலம்தான். அங்கு பெரும்பாலான பகுதி பாலைவனம் தானாம். சில இடங்களில்... வனவிலங்குகளும் இருக்கின்றனவாம். டார்வின் தான் வட மாநிலத்தின் தலைநகர்.

முழுக் கண்டத்தைக் கண்டு விட்ட சந்தோஷம் அனைவருக்கும் இருந்தது. முற்றிலும் மாறுபட்ட நாகரீகத்தைக் காண முடிந்தது. குறை நிறைகளை அறியமுடிந்தது. பிறரிடம் உள்ள தேவையான ஆக்கங்களை அறிந்து நாமும் செயல்பட வேண்டும் என்ற எண்ணம் ஏற்பட்டது. இத்தகைய அரிய வாய்ப்பு யாருக்குக் கிடைக்கும்? இந்தச் சிறுவர்கள் உண்மையிலேயே பாக்யசாலிகள்.

மெல்லச் சூரியன் உதயமாயிற்று. பிரிஸ்பனை நெருங்கிய போது நல்ல இயற்கைக் காட்சிகளைக் காண முடிந்தது.

இங்கு குளிரவில்லை. நம் இந்தியாவின் சீதோஷ்ண நிலையே இருந்தது. எப்போதும் சூரியன் இங்கு கதிர்களை வீசுவதால் Sun shine state என்று அழைப்பார்களாம்.

சுதந்திர நாள் என்று பெரும்பாலும் கடைகள் மூடியே இருந்தன. பஸ் நிலையம், விமான நிலையம் போன்று, வசதியுடன் இருந்தது. எல்லோரும் காலைக் கடன்களை முடித்து விட்டுக் காத்திருந்தனர். ஹோஸ்ட்கள் வரத் தொடங்கினர்.

திருமதி. நார்மாவும், திரு. கீத்தும் சிரித்தபடி காரில் இருந்து இறங்கி அன்போடு அழைத்துப் போயினர். வீடு சின்னதாகவும் வசதியாகவும் இருந்தது.

“அப்பாடா!” என்று ஸ்வெட்டர்களைக் கழற்றி எறிந்தான் விவேக்.

குளிக்கப் போன சியாம் சந்தோஷத்துடன் ஓடி வந்தான். “விவேக், இங்கு பாத் ரூமில் லாக் உள்ளது. நிம்மதியாகக் குளிக்கலாம்.”

விவேக் கடகடவென்று சிரித்தான். கீத் விசாரித்து விட்டு அவரும் சிரிக்க ஆரம்பித்தார். பொதுவாக ஆஸ்திரேலிய வீடுகளில் ஒரு பாத்ரூம் தான் இருந்தது. அதுதான் சுத்தம் பண்ண வசதி என்று. ஒரு ரூமிற்குக்கூட தாழ் இல்லை. அதுவும் கேன்பராவில் கண்ணாடிகளில் கதவு அமைத்த திரையில்லாத பாத்ரூம். வெளியே தெரியும் புல் வெளியை ரசித்தபடி குளிப்பார்களாம்.

எவ்வளவு கஷ்டப்பட்டுப் போனார்கள் அங்கு! சற்று மேடு பள்ளங்கள் நிறைந்து கேரளா மாதிரியே இருந்தது பிரிஸ்பன்.

நார்மா பள்ளி ஆசிரியை. கீத் ஒரு பாய்லர் கம்பெனியில் வேலை பார்ப்பதாகச் சொன்னார்.

“நாங்கள் பாய்லர்களை உங்கள் நாட்டிற்கு அனுப்புகிறோம்!” என்றார் கீத்.

“எங்கள் ஆடைகள் உங்களுக்கு வருகிறதே...” என்றான் விவேக்.

மிகுந்த அக்கறையுடன் அவர்களைக் கவனித்தனர் நார்மாவும் கீத்தும். இந்தியாவிற்கு இரு முறை வந்துள்ளார்களாம். “கல்கத்தாவில் நிறைய நாட்கள் இருந்தோம். அந்தக் கல்கத்தா குடும்பத்தை மறக்க முடியாது. சற்று ஏழைகள் ஆனாலும் தினமும் குளித்துச் சின்ன வீட்டையும் சுத்தப்படுத்தி விட்டே வெளியே வேலைக்குப் போனார்கள். கொஞ்சம் உணவு இருந்தாலும் பகிர்ந்தே சாப்பிட்டார்கள். அந்தச் சிரமத்திலும் விருந்தாளியையும் முக்கியமாகக் கவனித்தார்கள். இந்தியாவின் விருந்து உபசாரமும், மனிதாபிமானமும் பண்பாடும் போற்றத் தக்கவை.” நார்மா நெகிழ்ச்சியுடன் கூறினார். “ஆமாம், இந்தியா விருந்தோம்பலுக்குப் பெயர் பெற்றது!” என்று கூறி, “செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான் நல்விருந்து வானத்தவர்க்கு” என்ற குறளை மொழி பெயர்த்துச் சொன்னான் விவேக்.

இங்கு குளிர்ப்பிரதேசத்தில் தினமும் யாரும் குளிக்கவில்லை. வாரம் ஒரு முறைதான் குளித்தார்கள். நார்மா கீத் தினமும் குளித்து விட்டார்கள். கீத் தன் துணிகளை அயர்ன் பண்ணிக் கொள்வார். நார்மா தன்னுடையதை அயர்ன் செய்து கொள்வார்.

“உங்கள் நாட்டில் அம்மா அப்பாவிற்காகக் காத்திருந்து அவர் துணிகளைத் துவைத்து, தினமும் ராஜ கம்பீரம்தான் அப்பாவிற்கு! இல்லையா?” ஏக்கமாகக் கேட்டார் கீத்.

இருவருக்கும் சிரிப்பாக இருந்தது. பாவமாகவும் இருந்தது.

பாத்திரம் கழுவுவது வீட்டைச் சுத்தம் பண்ணுவது எல்லாம் கீத்துதான். நார்மா சமையல் மட்டும்தான் செய்வார். விவேக்கும், சியாமும் போட்டி போட்டுக் கொண்டு உதவி செய்தனர். மாலை ஹோட்டலுக்குப் போனார்கள். சுவையாகவே இருந்தது. விலை தான் அதிகம்.

இவர்கள் அடிக்கடி ஹோட்டலுக்குப் போவதில்லை. அதே போல் வீட்டிலேயே செய்து விடுகிறார்களே! விடுமுறைகளில் எல்லா வசதிகளுடன் கூடிய காரவன் வண்டிகளில் பிக்னிக் போய் விடுகிறார்கள்.

நியூசிலாந்திலும், இங்கும் பண்ணைகள் உள்ளதால் நல்ல பாலும் பால் பொருள்களும் கிடைக்கின்றன.

இப்போது உடல் நலத்தில் அக்கறை கொண்டு கொழுப்பு எடுத்தவற்றையே உண்கிறார்கள். ரொட்டிகளில் கூடப் பல தரம்.

எல்லாமே சத்துள்ளவை. கார்ன் பிளேக்ஸும் அப்படித்தான். காய்கள், பழங்கள் அதிகம் சேர்த்துக் கொள்கிறார்கள்.

“சத்தானதைச் சாப்பிட்டு ஆரோக்யமாக இருக்கிறார்கள்.”

“நாம் வதக்கி, பொரித்துச் சத்துகளை வீணடித்து விட்டு சத்தற்றதைச் சாப்பிட்டு உடலைக் கெடுத்துக் கொள்கிறோம்!” என்றான் விவேக்.

மாலை சின்னக் குன்று ஒன்றிற்குப் போய் பிரிஸ்பனின் இரவுத் தோற்றத்தை ரசித்தார்கள். சின்னக் குன்றைக்கூட ‘மவுண்ட்’ என்றார்கள். நமக்குத் தான் எத்தனை பெரிய மலைகள், நதிகள், இயற்கை வளங்கள் உள்ளன!

சியாம் விவேக் இருவரும் தீவிரமாகப் பேசிக் கொண்டார்கள்.

“நம் ஆன்மிகமும், பண்பாடும், நாகரிகமும் யாருக்கும் கிடைக்காது. நாம் கூட ஜனத் தொகையைக் குறைத்து, அரசியல் சுரண்டல்களைத் தவிர்த்து நிதியை நல்ல முறையில் பயன்படுத்தி நகரங்களைச் சுத்தமாக, வசதியாகச் செய்து ஏழ்மையைப் போக்கி ஏற்றத்துடன் வாழலாமே!”

“விவேக், அங்கே பாரேன், சாந்தகுமார்-மேத்தா. அட! சலீம்-ஜகத் கூட வந்துள்ளார்கள்.” ஒரே மகிழ்ச்சி. தங்கள் ஹோஸ்டுகளுடன், அதே இடத்தைக் காண வந்திருக்கிறார்கள் அவர்களின் நண்பர்கள்.

ஜானி சொன்னான்: “இந்த ஊர் ரொம்பப் பிடித்துள்ளது. எனக்கு எங்கள் கேரளாவில் இருப்பதைப் போன்று இருக்கிறது என்றான். நாளை குரூப் டூரில் பார்க்கலாம்” என்று விடை பெற்றுக் கொண்டார்கள்.

Sea World, Dream World பார்க்கப் போய்க் கொண்டு இருந்தார்கள். Movie land இப்போது தான் ரெடியாகிக் கொண்டிருக்கிறது.

Sea Worldல் பொழுது போனதே தெரியவில்லை. அத்தனை குதூகலங்கள். டிஸ்னி லேண்ட் மாதிரி இங்கு அமைத்துள்ளார்கள்.

பென்குவின் ஷோ, டால்பின் ஷோ நன்றாக இருந்தது. அத்தனை நன்றாகப் பழக்கி இருந்தார்கள். ‘சீல்’ பிராணி மேடையைச் சுற்றி வந்தது. பார்வையாளர்களுக்கு முத்தம்

கொடுத்தது. கை தட்டியது. ஷோவை விட அதை நடத்துபவரின் பேச்சு எல்லோரையும் கவர்ந்தது.

ஹெலிகாப்டரிலும், பலூன்களிலும் பறந்தார்கள். திகிலுடன் கூடிய மகிழ்ச்சி. 'World of the Sea' எனும் மேடை நிகழ்ச்சியில் மேடையிலேயே கண்ணாடிக் கூண்டில் கொடிய ஷார்க் மீனுடன் ஒரு மனிதர் கடல் உடைகளுடன் நிகழ்த்திய நிகழ்ச்சியை நடத்தினார். ஆழ்கடலின் அடியில் நடப்பதைப் பார்ப்பது போன்ற பிரமை.

மோனோ ரயில், கிடுகிடுக்க வைக்கும் ரோலோ கோஸ்டர்கள், வழுக்கி விழும் படகுகள் எல்லாவற்றிலும் ஏறிப் பார்த்து மகிழ்ந்தனர்.

வாசலில் மொத்தமாக டிக்கெட் வாங்கினால் போதும். ஒவ்வொரு இடத்திலும் வாங்க வேண்டாம். எத்தனை முறை வேண்டுமானாலும் அதே நிகழ்ச்சிக்கு வரலாம்.

குகைப் படகில் போகும் போது தடதடவென்ற சத்தம், பொம்மை முதலைகள் இவர்கள் அருகில் வந்து பயமுறுத்தின. பீப்பாய்கள் அவர்கள் மீது வந்து விழுவதைப் போல இருந்தன. தண்ணீர் கொட்டிக் கொண்டிருந்த மதகின் வழியில் போகும் போது சியாமும், விவேக்கும் தலையை மூடிக் கொண்டார்கள். என்ன ஆச்சரியம்! நீரின் அருகே வரும் போது அது விழவில்லை. அசடு வழிந்தது.

கடற்கரையிலேயே ஸ்டேடியம். கடல் கொள்ளைக்காரர்கள் பற்றிய நாடகத்தைக் கடலிலேயே நடத்திக் காட்டினார்கள். அதில் படகுகள் மூலமும், பைக் மூலமும் எத்தனை வித்தைகள்! பாய்ஜி, பிரபா ஆன்ட்டி கூட மிகவும் ரசித்தனர். பெரியவர்கள் எல்லாம் குழந்தைகள் ஆகி விட்டனர் அங்கு. இந்தச் சிறுவர்களைச் சொல்லவும் வேண்டுமா?

சியாமிற்கு டில்லி 'அப்புகர்' நினைவிற்கு வந்தது. பரத் பம்பாயில் Essel worldஐ நினைத்தான். விவேக் கூட வி.ஜி.பி லேண்டை நினைத்துக் கொண்டான்.

இந்தியாவில் இன்னும் நிறைய இவற்றைப் போலக் கொண்டு வர வேண்டும். நன்கு பராமரிக்க வேண்டும் என்று நினைத்தார்கள்.

புகழ் பெற்ற **'கிரேட் பேரியர் ரீப்'** எனும் பவளப்பாறைகளை, க்ளாஸ் பாட்டம் போட்டில் பார்த்தது, மறக்க முடியாத அனுபவம்.

நார்மா, கீத் கூறியபடி பிரிஸ்பன் கோச்சில் **'ஓசன் ஏரியம்'** காணச் சென்றார்கள். 'Under Water World' எனும் பிரமிக்கும் மீன் காட்சி சாலைக்குச் சென்றார்கள்.

இவர்கள் நகர்ந்து போகும் பெல்ட்டில் நிற்க தலை மேலே முழுவதும் கண்ணாடியால் மூடி இருந்தார்கள். கண்ணாடியைத் தொட்டபடி பெரிய ஷார்க்குகளும், பல தரப்பட்ட மீன்களும் நீந்திக் கொண்டிருந்தன. நம்பவே முடியவில்லை. கடலுக்கு அடியிலேயே சென்று விட்டோமோ என்று கூட எண்ணினார்கள். இது முடிந்ததும் பைன் ஆப்பிள் பாக்டரிக்கு விஜயம் செய்தார்கள். அன்னாசிப் பழங்கள் வரிசை வரிசையாகப் பயிராகி இருந்தன. பக்கத்தில் பெரிய அன்னாசிப் பழ உருவக் கட்டிடம் ஒன்று. அந்த அன்னாசிப் பழத்திற்குள் சென்று விட்டு வந்தனர்.

பிரமாதமான 'சாண்டே' ஐஸ்கிரீமை ரசித்துச் சாப்பிட்டார்கள். அங்கு கூட பாக்டரியைச் சுற்றி வர போட், குட்டி ரயில் எல்லாமே இருந்தன.

பார்த்து முடித்து பஸ்ஸில் ஏறினார்கள். பஸ் நகர வில்லை. "யாரோ நிறைய ஐஸ்கிரீம்" சாப்பிட்டார்கள் பஸ் வெயிட் தாங்க முடியாமல் நகரவில்லை என்று ஜோக் அடித்தார் டிரைவர். கொல் என்று அனைவரும் சிரித்தனர்.

பயணிகளை யார் யார் எந்த நாட்டவர்கள் என்று விசாரித்தார்.

"இதோ அழகான மாமரங்கள்." உற்சாகத்தோடு மாமரத்தைக் கூட காட்சிப் பொருளாக்கி வர்ணித்தார். பழைய எரிமலைக்குன்றைப் பாதுகாத்து வருகிறார்கள். Glass House Mountain என்று வர்ணித்தார் டிரைவர்.

இறுதியில் பழமார்க்கெட் வந்தார்கள். அவர்களாகத் தொங்கும் பிளாஸ்டிக் பைகளைக் கிழித்துக் கொண்டார்கள். வேண்டிய புத்தம் புதுக் காய்களையும், ஆப்பிள், க்வி புரூட் இன்னும் பலவிதப் பழங்களையும் எடுத்துப் போட்டுக் கொண்டு பில் போட்டு வந்தார்கள்.

டிரைவருக்கும் பழம் வாங்க வேண்டும் போல. அதுதான் இங்கே கூட்டி வந்துவிட்டார். மெதுவாகச் சிரித்தனர் சியாமும், விவேக்கும்.

மறுநாள் நார்மாவின் ஸ்கூலுக்குக் கூட்டிப் போனார். பள்ளியின் அருகே ரோடில் ஒரு ஆசிரியை போர்டை வைத்துக் கொண்டு நின்றார். டிராபிக் வேகத்தை வண்டிகள் குறைத்து அங்கு பள்ளி இருப்பதை உணர்த்தி சிறுவர்களைப் பாதுகாக்க அப்படிச் செய்து கொண்டிருந்தார்.

எல்லா ஆசிரியர்களுக்கும் இவர்களை அறிமுகப்படுத்தி வைத்தார். குழந்தைகள் உற்சாகமாக இருந்தனர். டீச்சரைக் கண்டு பயமோ பீதியோ இல்லை. டீச்சரிடம் அன்பாகப் பேசினார்கள்.

முதல் வகுப்பு மாணவர்கள் எல்லாம் பொம்மைகளுடன் விளையாடினார்கள். T.V யில் கார்டூன்கள் பார்த்தார்கள். வகுப்பறை முழுவதும் வண்ண வண்ணப் படங்களும் பலூன்களும் தொங்கின. கிளாஸ்ரூம் மாதிரி இல்லாமல் குழந்தைகள் விளையாடும் ரூம் மாதிரியே இருந்தது. கொஞ்சம் பெரிய பிள்ளைகளுக்கு வகுப்பு சற்று வித்தியாசமாக இருந்தது. 5வது வகுப்பில்தான் தேர்வு இருக்குமாம்.

நம் நாட்டில் எல்.கே.ஜி., யூ.கே.ஜி. மாணவர்களுக்குக் கூட பரீட்சை உள்ளது என்றதும் நம்பாமல் பயந்தே போனார்கள். பாவம் என்று பரிதாபப்பட்டார்கள். உண்மைதான். மூன்று வயது மழலைகளை எப்படி வாட்டி எடுக்கிறோம் என்று நினைத்தான் விவேக். பள்ளியில் படிக்கிறோம் என்ற பய உணர்ச்சியே இல்லாமல் படிப்படியாக எல்லா அறிவுகளையும் புகுத்தி விடுவோம் என்றார் நார்மா.

ஆங்கிலம் தெரியாத குழந்தைகளுக்கு அந்தந்த மொழியில் கொஞ்சியபடி சொல்லித் தந்து கொண்டிருந்தார் ஒரு ஆசிரியை.

நார்மாவின் வகுப்பிற்கு வந்ததும் விவேக், சியாம் இருவருக்கும் எல்லா மாணவர்களையும் அறிமுகப்படுத்தினார்.

அந்தக் குழந்தைகளும் பல கேள்விகள் கேட்டனர்.

என்ன சாப்பிடுவீர்கள்? வீடு எதனால் கட்டப் பட்டிருக்கும்? உங்கள் வயது என்ன? பள்ளியில் என்ன சொல்லித் தருவார்கள்?

இப்படி கேட்கக்கேட்க விவேக்கும் சியாமும் உற்சாகத்தோடு பதில் கூறினார்கள்.

சியாம் கேட்டான், “ஸ்கூலுக்கு லேட்டாக வந்தால் என்ன செய்வீர்கள்?” என்று.

“நிச்சயமாகத் தண்டனை தர மாட்டோம். குழந்தை பொய் சொல்லாது. தாமதம் ஏற்பட ஏதாவது ஒரு காரணம் இருக்கும். கேட்டுத் தெரிந்து கொண்டு விட்டு விடுவோம்!” என்றார் நார்மா.

மதியம் ஏர்போர்ட்டில் இருந்தாக வேண்டும். இரவே பரிசுப்பொருட்களைத் தந்துவிட்டு நெடு நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள். இப்போது மீண்டும் விடை பெறும் போது கண்ணீரே வந்து விட்டது. நார்மாவும், கீத்தும் அன்போடு முத்தமிட்டார்கள். விரைவில் மீண்டும் இந்தியா வருவதாகக் கூறினார்கள். கீத் விமான நிலையத்தில் இறக்கி விட்டு விடை பெற்றார்.

12. விமான நிலையத்தில் வினோதம்

ஆஸ்திரேலியாவில் விளையும் 'ஓப்பல்' எனும் கற்கள் புகழ் பெற்றவை. விமான நிலையத்தில் உள்ள (Duty Free Shop) டியூட்டி ஃப்ரீ ஷாப்பில் தங்கள் அம்மாவிற்கெனச் சிறு ஓப்பல் செயின்களை வாங்கிக் கொண்டனர் சியாமும், விவேக்கும்.

பாய்ஜி அனைவரையும் அழைத்து அயல் நாட்டிற்கு வரும்போதும் போகும் போதும் செய்ய வேண்டிய Customs, Immigration Check up எல்லாம் செய்யச் சொல்லி தயார்ப்படுத்தினார்.

ஆஸ்திரேலியாவை விட்டுப் பிரியப் போகிறோம் என்று வருத்தமாக இருந்தது சிறுவர்களுக்கு.

பாய்ஜி எல்லாக் குழந்தைகளையும் அருகில் அமர்த்திக் கொண்டார்.

"நம் ஆஸ்திரேலியப் பயணம் நன்றாக அமைந்தது. நீங்களும் நல்ல முறையில் நடந்து கொண்டீர்கள். அது எனக்கு மிகவும் மகிழ்ச்சி அளிக்கிறது."

"நிச்சயம் இந்தப் பயணம் பல் வேறு அனுபவங்களையும், பாடங்களையும் கற்றுத் தந்திருக்கும். 'World is my family' என்பதை நன்கு உணர்ந்திருப்பீர்கள்.

"பகைமையை முற்றும் மறந்திட வேண்டும். பார் எங்கும் பாசம் நிறைந்திட வேண்டும். இதை மனதில் வைத்தே வருங்காலச் சந்த்திகளான உங்களை இப்பயணத்திற்கு அழைத்து வந்தேன். நீங்கள் நல்லதொரு உலகை உருவாக்கிக் காட்ட வேண்டும்."

"இன்னொரு இனிய செய்தி. இன்னும் இரண்டு வருடங்களில் நாம் தென் அமெரிக்கா பயணத்தை மேற்கொள்ள இருக்கிறோம். மகிழ்ச்சி தானே?" என்றார் பாய்ஜி.

குழந்தைகள் சந்தோஷத்தில் கை தட்டினார்கள். பாய்ஜிக்கு நன்றி கூறினார்கள்.

விவேக் நிறைந்த மனத்துடனும் உறுதியான குரலிலும் சொன்னான்:

“இந்தப் பயணம் நமக்குக் கிடைத்த அதிர்ஷ்டம் என்றே சொல்ல வேண்டும், சியாம். இப்படி ஒரு வாய்ப்பு கிடைப்பது அரிது. இதை நல்ல விதமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பாய்ஜி சொன்னபடி நடந்து காட்டுவதுதான் நாம் அனைவரும் அவருக்குச் செய்யும் நன்றிக்கடன்.”

“ஆமாம், விவேக். அது நம் கடமையும் கூட!” என்றான் சியாம். விவேக் தன் ஹேண்ட் பேக்கைத் திறந்தான். பெலாரட்டில் மேயர் தந்த பரிசான தங்க மெடலை எடுத்துப் பார்த்தான். “இது வெறும் பரிசு மட்டும் இல்லை. நம் பாரதத் தாய்க்குப் பெருமை சேர்க்கும் விலை மதிப்பற்ற பொக்கிஷம் கூட!” சொல்லிக் கொண்டிருக்கும் போதே யாரோ அந்த மெடலை ‘படக்’ என்று பிடுங்கினார்கள். திடுக்கிட்டு எழுந்தான் விவேக். ஒரு கணம் ஒன்றும் புரியவில்லை.

அதிர்ச்சியில் பேசக் கூட முடியவில்லை.

சியாம் இதைப்பார்த்து விட்டான். “பிடியுங்கள், பிடியுங்கள். மெடலைத் திருடிக் கொண்டு போகிறான்” என்றபடி அவனும் ஓடினான். விமான நிலையத்தில் பரபரப்பாகி விட்டது. கொஞ்ச நேரத்தில் 20 வயதான வாலிபன் ஒருவனைக் காவலாளிகள் பிடித்த படி அழைத்துவர, கூட சியாமும் வந்து கொண்டிருந்தான்.

சிறுவர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டனர். வெறுப்புடன் பார்த்தனர். தக்க தண்டனை கொடுக்க வேண்டும் என்றனர். சியாமிற்கு இரண்டு அறை கொடுக்க வேண்டும் போல் இருந்தது.

“மெடல் தான் கிடைத்து விட்டதே. அவனை மன்னித்து விட்டு விடுங்கள்!” என்று அமைதியுடன் கேட்டுக் கொண்டான் விவேக்.

“என்ன விவேக் இது? விலை மதிப்பற்றது என்று நீ தானே சொன்னாய்? இதைப் போய்த் திருடி இருக்கிறான். சும்மா விடலாமா?”

“இல்லை சியாம். அதன் பெருமை அவனுக்கு எங்கே தெரியப் போகிறது? அவனுக்கு அது வெறும் தங்க மெடல் தானே?”

“இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண

நன்னயம் செய்து விடல்”

இது வள்ளுவரின் வாக்கு.

நமக்குத் தீமை செய்தவனுக்கும் நன்மை செய்வதே நாம் அவனுக்குத் தரும் தண்டனை. எனக்காக அவனை விட்டு விடுங்கள், ப்ளீஸ்."

காவலாளிகளுடன் பேசிக் கொண்டிருந்த பாய்ஜிக்கு அவன் சொல்வது மிகவும் பிடித்துப் போனது. அவனை விட்டுவிடுமாறு கேட்டுக் கொண்டார்.

மற்றக் குழந்தைகளும் சகபிரயாணிகளும் ஆச்சரியப்பட்டுப் போனார்கள்.

“இப்படி ஒரு நல்ல மனமா?”

அதற்குள் ஒரு வெளிநாட்டுத் தம்பதி ஓடி வந்தனர். “அவன் எங்கள் மகன். சிறு வயதில் இருந்தே இப்படித்தான். படிப்பே ஏறாது. அந்த ஏக்கத்திலும் பொறாமையிலும், மெடல்கள், பரிசுக் கோப்பைகளைப் பார்த்து விட்டால் விட மாட்டான். பிடுங்கிக் கொண்டு போய் விடுவான். மனநிலை சரியில்லாத இவனை இங்கு உட்கார வைத்து விட்டு செக்கிங் பண்ணப் போய்விட்டோம். அவனை மன்னித்து விடுங்கள்!” என்று விளக்கியதும் பாவமாகப் போனது அனைவருக்கும்.

தலை குனிந்திருந்த அவன் முகத்தை நிமிர்த்தி தோளில் தட்டிக் கொடுத்து ஆரத் தழுவிக் கொண்டான், விவேக்.

அந்த வாலிபன் ஆச்சரியத்துடனும் நன்றியுடனும் பார்த்தான். பாய்ஜியும் அவனைத் தட்டிக் கொடுத்து அனுப்பி வைத்தார்.

விவேக்கை மனமாரப் பாராட்டி, “நான் எண்ணும் எண்ணத்தை இன்று செயலில் காட்டியுள்ளான், விவேக். நீங்களும் இது போல விசாலமான மனம் படைத்தவர்களாக இருக்க வேண்டும்!” என்றார்.

பிரபா ஆன்ட்டி அவனை அன்புடன் அணைத்துக் கொண்டார்.

பெருமை பொங்க சியாம் தன் நண்பனின் கைகளைப் பிடித்துக் கொண்டான்.

‘பாரத மாதா கீ ஜெய்!’ குழந்தைகளின் கோஷத்தில் பாய்ஜியும் பிரபாவதியும் சேர்ந்து கொண்டு பாரதம் செல்வதற்கு விமானம் நோக்கி நடக்கலானார்கள்.